அத்தியாயம் II
வரவு செலவுத் திட்ட மேலாண்மை

அத்தியாயம் – II: வரவு செலவு திட்ட மேலாண்மை

இந்த அத்தியாயம் தமிழ்நாட்டின் வரவு செலவு திட்ட செயல்முறையை மதிப்பாய்வு செய்கிறது. வரவு செலவு திட்ட மதிப்பீடுகளுக்கும் உள்ளபடியான செலவினங்களுக்கும் இடையிலான குறிப்பிடத்தக்க இடைவெளிகளை வெளிப்படுத்துகிறது. இதில் அதிகப்படியான செலவினம், தொடர்ச்சியான சேமிப்பு மற்றும் இறுதி நேர நிதி ஒப்படைப்பு ஆகிய சிக்கல்களும் காணப்பட்டன. மேலும், நிதி திட்டமிடல், கட்டுப்பாடுகள் மற்றும் இணக்கத்தில் உள்ள பலவீனங்களும், அரசியலமைப்பு சட்ட விதிகளிலிருந்து விலகல்களும் சரியான நேரத்தில் நிதி பயன்பாடு மற்றும் நடைமுறைக்கு ஒத்த வரவு செலவுத் திட்டத்தின் அவசியத்தையும் முன்னிலைப்படுத்துகிறது.

2.1 வரவு செலவுத் திட்ட செயல்முறை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 202வது பிரிவுக்கு இணங்க, ஒவ்வொரு மாநிலத்தின் அந்தந்த நிதியாண்டிற்கான எதிர்நோக்கப்படும் வரவுகள் மற்றும் செலவினங்களின் அறிக்கையான "ஆண்டு நிதி நிலை அறிக்கை (பட்ஜெட்)", மாநில சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட வேண்டும். செலவினங்களின் மதிப்பீடுகள், 'சாட்டப்பட்ட' மற்றும் 'அனுமதிக்கப்பட்ட'[1] செலவினங்களை தனித்தனியாக வெளிப்படுத்துவதுடன் வருவாய்வகை செலவினங்களை மற்ற செலவினங்களிலிருந்து வேறுபடுத்தி காட்டுகிறது. மாநில அரசு, எந்தவொரு செலவினத்தையும் சட்டமன்ற அங்கீகாரத்துடன் மேற்கொள்வது அவசியம்.

தமிழ்நாடு வரவு செலவுத் திட்ட கையேட்டின்படி, பல்வேறு துறைகளிடமிருந்து பெறப்படும் திட்ட மதிப்பீடுகளைக் கொண்டு வருடாந்திர வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பது நிதித்துறையின் பொறுப்பாகும். வருவாய் மற்றும் செலவினங்களுக்கான துறைசார் மதிப்பீடுகள் அந்தந்த துறைத்தலைவர்கள் ஆலோசனைப்படி கட்டுப்பாட்டு அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட தேதிகளில் நிதித்துறைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. நிதித்துறை மதிப்பீடுகளை ஒருங்கிணைத்து 'மானியங்களுக்கான தேவை' எனப்படும் விரிவான மதிப்பீடுகளைத் தயாரிக்கிறது. மாநில வரவு செலவுத் திட்டம் முக்கியமாக பின்வரும் ஆவணங்களைக் கொண்டுள்ளது.

- ✓ ஆண்டு நிதிநிலை அறிக்கை
- ✓ FRBM அறிக்கை
- ✓ மானியங்களுக்கான தேவை
- ✓ நடுத்தர கால நிதித் திட்டம்
- ✓ வரவுகளின் விரிவான மதிப்பீடுகள்
- ✓ மற்றவைகள்

---

[1] **சாட்டப்பட்ட செலவினம்**: குறிப்பிட்ட நோக்கங்களுக்காக (உதாரணமாக அரசியல் சாசன அதிகாரிகளின் ஊதியம், கடன்களை திருப்பிச் செலுத்துதல் போன்றவை) மாநில சட்டமன்றத்தின் ஒட்டளிப்புக்கு உட்படாமல் மாநில தொகுநிதியில் சாட்டப்படும் செலவினம் ஆகும்.
அனுமதிக்கப்பட்ட செலவினம்: பிற செலவினங்கள் அனைத்தும் சட்டமன்ற ஒட்டளிப்புக்கு உட்பட்டவையாகும்.

2.2 வரவு செலவுத் திட்ட முன் கணிப்பு மற்றும் எதிர்பார்ப்பிற்கும் மற்றும் உள்ளபடியானதற்கும் இடையிலான இடைவெளி

சிறந்த வரி நிர்வாகம்/பிற வரவுகள் மற்றும் பொதுச் செலவினங்களை திறம்பட நிர்வகிப்பது ஆகியவை, வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கும், திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதற்கும், கண்காணிப்புத் திறனை மேம்படுத்துவதற்கும், நிதி இலக்குகளை அடைவதற்கும் இடையிலான உரிய சமநிலையை பராமரிக்கிறது. தொடர்ச்சியான சேமிப்பு மற்றும் அதிகப்படியான செலவினங்கள், அடிப்படை வரவு செலவுத் திட்ட செயல்முறைகளில் அதிக கவனத்துடன் செயல்பட வேண்டிய அவசியத்தை சுட்டிக்காட்டுகின்றன.

மாநில சட்டமன்றத்திலிருந்து பெறப்பட்ட மொத்த ஒதுக்கீடு, உள்ளபடியான செலவு மற்றும் சேமிப்புகள் பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.1ல்** சுருக்கமாக கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.1 2024-25 நிதியாண்டில் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டுக்கெதிரான உள்ளபடியான செலவினம்

(₹ கோடியில்)

	செலவினத்தின் தன்மை	அசல் மானியம்/ ஒதுக்கீடு	துணை மானியம்/ ஒதுக்கீடு	மொத்த ஒதுக்கீடு	உள்ளபடியான செலவு	சேமிப்புகள்	2024- 25ல் ஒப்படைக்கப்பட்டது	
							தொகை	விழுக்காடு
அனுமதிக்கப்பட்டது	I. வருவாய்	2,89,343.47	14,901.78	3,04,245.25	2,76,439.21	27,806.04	27,010.43	*97.14*
	II. மூலதனம்	47,684.38	6,815.65	54,500.03	47,122.93	7,377.10	7,619.76	*103.29*
	III. கடன்கள் மற்றும் முன்பணங்கள்	16,533.61	508.30	17,041.91	11,904.86	5,137.05	5,136.62	*99.99*
மொத்தம்		**3,53,561.46**	**22,225.73**	**3,75,787.19**	**3,35,467.00**	**40,320.19,.00,**	**39,766.81**	***98.63***
சாட்டப்பட்டது	IV. வருவாய்	*64,254.91*	*110.26*	*64,365.17*	*60,855.23*	*3,509.94*	*3,509.34*	*99.98*
	V. மூலதனம்	*8.19*	*132.50*	*140.69*	*132.53*	*8.16*	*8.16*	*100.00*
	VI. பொது கடன் திருப்பிச் செலுத்துதல்	*41,178.25*	*0.00*	*41,178.25*	*40,684.40*	*493.85*	*493.85*	*100.00*
மொத்தம்		**1,05,441.35**	**242.76**	**1,05,684.11**	**1,01,672.16**	**4,011.95**	**4,011.35**	***99.99***
எதிர்பாராச் செலவு நிதிக்கான ஒதுக்கீடு		0.00	350.00	**350.00**	**350.00**	0.00	0.00	*0.00*
பெரு மொத்தம்		**4,59,002.81**	**22,818.49**	**4,81,821.30**	**4,37,489.16**	**44,332.14**	**43,778.16**	***98.75***

(ஆதாரம்: 2024-25 ஆம் ஆண்டிற்கான நிதியொதுக்க கணக்குகள்)

குறிப்பு: மேலே காட்டப்பட்டுள்ள மொத்த செலவினங்களில், வருவாய் தலைப்புகள் (₹8,625.04 கோடி) மற்றும் மூலதன தலைப்புகள் (₹147.50 கோடி) ஆகியவற்றின் கீழ் சரிசெய்யப்பட்ட செலவினக் குறைப்புகளை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. வருவாய் தலைப்புகளின் கீழ் சரிசெய்யப்பட்ட செலவினக் குறைப்பு தொடர்பான ₹8,625.04 கோடியில், "911" என்ற சிறு தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட முந்தைய ஆண்டுகளின் அதிகமாக வழங்கப்பட்ட தொகைகளை வசூலித்தல் / முந்தைய ஆண்டுகளின் செலவிடப்படாத தொகைகளாக ₹4,445.90 கோடியும் மக்களவை தேர்தலுக்காக முதலில் மாநில அரசால் செலவு செய்யப்பட்டு, இந்த ஆண்டு மத்திய அரசிடமிருந்து திரும்பப் பெறப்பட்ட ₹100 கோடியும் அடங்கும்.

அனுமதிக்கப்பட்ட மூலதன பிரிவின் கீழ், எங்கெல்லாம் ஒப்படைக்கப்பட்ட தொகை சேமிப்பை விட அதிகமாக இருந்ததோ, அங்கெல்லாம் நிதியாண்டின் இறுதியில் மறு ஒதுக்கீட்டின் போது ஒப்படைக்கப்பட வேண்டிய சரியான தொகையை துறைகளால் தீர்மானிக்க முடியவில்லை என்பதை **அட்டவணை 2.1** இல் இருந்து தெரிந்து கொள்ளலாம். ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள

மேலாண்மை அமைப்பு (IFHRMS) செயல்படுத்தப்பட்ட போதிலும், மாநிலத்தின் நிதிகளின் போதுமான மேற்பார்வை இல்லாததை இது எடுத்துக்காட்டுகிறது.

2020-21 முதல் 2024-25 வரையிலான காலகட்டத்தின் அசல் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு, திருத்தப்பட்ட மதிப்பீடு, மற்றும் உள்ளபடியான செலவினங்களின் போக்குகள் **அட்டவணை 2.2 இல்** கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.2: நிதி ஆண்டுகள் 2020-21 முதல் 2024-25 வரையிலான வரவு செலவு திட்ட ஒதுக்கீடு, திருத்தப்பட்ட மதிப்பீடு மற்றும் உள்ளபடியான செலவினம் ஆகியவற்றின் போக்குகள்

(₹ கோடியில்)

	2020-21	2021-22	2022-23	2023-24	2024-25
அசல் வரவு செலவு திட்ட ஒதுக்கீடு	3,04,954.44	3,35,288.14	3,64,107.02	4,13,639.78	4,59,002.81
துணை ஒதுக்கீடு	34,018.02	14,451.49	30,148.70	33,248.48	22,818.49
மொத்த ஒதுக்கீடு (TB)	3,38,972.45	3,49,739.63	3,94,255.72	4,46,888.26	4,81,821.30
திருத்தப்பட்ட மதிப்பீடு (RE)	3,29,034.84	3,20,375.66,	3,48,450.41	4,12,976.84	4,40,245.19
உள்ளபடியான செலவு (AE)	2,93,753.73	3,19,361.82	3,59,166.33	4,13,585.72	4,37,489.16
சேமிப்புகள்	(-) 45,218.72	(-) 30,377.81	(-) 35,089.39	(-) 33,302.54	(-) 44,332.14
வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டில் துணை ஒதுக்கீட்டின் விழுக்காடு	*11.16*	*4.31*	*8.28*	*8.04*	*4.97*
ஒட்டுமொத்த ஒதுக்கீட்டில் ஒட்டுமொத்த சேமிப்பு/ மிகையின் விழுக்காடு	*13.34*	*8.69*	*8.90*	*7.45*	*9.20*
TB - RE	9,937.61	29,363.97	45,805.31	33,911.42	41,576.10
RE-AE	35,281.11	1,013.84	(-) 10,715.92	(-) 608.88	2,756.03
(TB-RE) TBல் விழுக்காடு	*2.93*	*8.40*	*11.62*	*7.59*	*8.63*
(RE-AE) TBல் விழுக்காடு	*10.41*	*0.29*	*(-) 2.72*	*(-) 0.14*	*0.57*

(*ஆதாரம்: அந்தந்த வருடத்திய நிதியொதுக்க கணக்குகள் மற்றும் ஆண்டு நிதி அறிக்கைகள்*)

முந்தைய ஆண்டில் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் 8.04 விழுக்காடாக இருந்த துணை ஒதுக்கீடு, 2024-25 ஆம் ஆண்டில் (₹22,818.49 கோடி) 4.97 விழுக்காடாக மட்டுமே இருந்தபோதிலும், வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் மொத்த பயன்பாட்டின் விழுக்காடு 90.80 விழுக்காடாக மட்டுமே இருந்தது. இதன் விளைவாக, முந்தைய ஆண்டில் 7.45 விழுக்காடாக இருந்த மொத்த சேமிப்பு, இந்த ஆண்டில் 9.20 விழுக்காடாக உயர்ந்தது. திருத்தப்பட்ட மதிப்பீடுகளுக்கும் உள்ளபடியாக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கும் இடையிலான வேறுபாடு பல ஆண்டுகளாக ஏற்ற இறக்கமாக உள்ளது மற்றும் முந்தைய ஆண்டை விட இந்த ஆண்டில் விரிவடைந்துள்ளது. மேலும், **அட்டவணை 2.2இன்படி**, நடப்பாண்டின் உள்ளபடியான செலவினம், வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டை விட மிகக் குறைவாக இருந்தது என்பதைக் குறிக்கிறது. இது வரவு செலவுத் திட்ட தயாரிப்பில் உள்ள குறைபாடுகளை எடுத்துக்காட்டுகிறது.

விளக்கப்படம் 2.1: 2020-21 முதல் 2024-25 வரை BE, RE மற்றும் உள்ளபடியான செலவினம் ஆகியவற்றின் போக்கு



(ஆதாரம்: அந்தந்த வருடத்திய நிதியொதுக்க கணக்குகள் மற்றும் ஆண்டு நிதி அறிக்கைகள்)

2020-21 ஆம் ஆண்டில், மொத்த வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்கும் திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கும் இடையே வேறுபாடு இருந்ததை **விளக்கப்படம் 2.1**ல் இருந்து காணலாம். இது 2021-22 முதல் படிப்படியாகக் குறைந்து வந்து, 2023-24 ஆம் ஆண்டில் ஒன்றிணைந்து, பின்னர் 2024-25 இல் மீண்டும் விரிவடைந்தது. இது வரவு செலவுத் திட்ட செயல்பாட்டில் உள்ள முரண்பாடுகளை பிரதிபலிக்கிறது.

2.2.1 வரவு செலவு திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்களின் கூறுகள்/சேவைகள் வாரியான பகுப்பாய்வு

2024-25 நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு மற்றும் செலவினங்களின் கூறு வாரியான பகுப்பாய்வு **அட்டவணை 2.3** இல் கொடுக்கப்பட்டுள்ளது. ஒதுக்கீட்டுக் கணக்குகளில் உள்ள வேறுபாடுகள் தொடர்பாகப் பெறப்பட்ட விளக்கங்களின் சுருக்கம் **விளக்கப்படம் 2.2 இல்** விவரிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.3: 2024-25 ஆம் ஆண்டிற்கான கூறு வாரியான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு மற்றும் செலவுகள்

(₹ கோடியில்)

கூறு	மொத்த வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு	மொத்த செலவினம்	மொத்த வரவு செலவுத் திட்டத்தின் விழுக்காடு	மொத்த செலவினத்தின் விழுக்காடு	மொத்த வரவு செலவுத் திட்டத்திற்கு எதிரான செலவின விழுக்காடு
(1)	(2)	(3)	(4)	(5)	(6=3/2*100)
தவிர்க்க இயலாத செலவினம்	1,76,775	1,76,676	*36.69*	*40.38*	*99.94*
மாநிலத் திட்டங்கள்	1,14,622	64,958	*23.79*	*14.85*	*56.67*
CSS-க்கான மத்திய அரசின் பங்கு	13,581	14,918	*2.82*	*3.41*	*109.84*
CSS-க்கான மாநிலப் பங்கு	9,476	9,423	*1.97*	*2.15*	*99.44*
EAP – வெளிநாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்	25,099	13,572	*5.21*	*3.10*	*54.07*

(ஆதாரம்: 2024-25 ஆம் ஆண்டிற்கான நிதிக் கணக்குகள்)

வருவாய் கணக்கில் அரசாங்கத்தின் தவிர்க்க இயலாத செலவினங்களில் வட்டி செலுத்துதல், சம்பளம் மற்றும் ஊதியங்களுக்கான செலவு, சம்பள மானியங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் ஆகியவை அடங்கும். இவை, கூட்டாக அரசாங்க வளங்களில் முதல் முன்னுரிமை கொண்டுள்ளது. தவிர்க்க இயலாத செலவினம் முந்தைய ஆண்டை விட ₹13,321 கோடி (8.15 விழுக்காடு) அதிகரித்துள்ளது. அதாவது 2023-24 இல் ₹1,63,355 கோடியாக இருந்து, 2024-25 இல் ₹1,76,676 கோடியாக உயர்ந்து இருந்ததை செலவினங்களிலிருந்து காணலாம். தவிர்க்க இயலாத செலவினங்களின் மேல்நோக்கிய போக்கு அரசாங்கத்தை வளர்ச்சித் துறைக்கு குறைந்த நெகிழ்வுத்தன்மையுடன் செயல்பட வைத்தது.

விளக்கப்படம் 2.2: ஒதுக்கீட்டுக் கணக்குகளில் ஏற்படும் மாறுபாட்டிற்கான விளக்கத்தின் சுருக்கம்



(ஆதாரம்: O/o AG (A&E) ஆல் வழங்கப்பட்ட விவரங்கள்)

மிகை செலவினம்/சேமிப்புக்கான கருத்துகள் சேர்க்கப்பட்ட 1,702 துணைத் தலைப்புகளில், 262 துணைத் தலைப்புகளுக்கு விளக்கங்கள் தேவைப்பட்டன. இருப்பினும், 25 துணைத் தலைப்புகளுக்கு மட்டுமே மாறுபாடுகளுக்கான காரணங்கள் மாநில அரசிடமிருந்து பெறப்பட்டன.

2.3 வரவு செலவு திட்ட துல்லியத்தன்மை

செலவின அமைப்பு வெளிப்பாடு

செலவின அமைப்பு வெளிப்பாடு, வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது, வரவு செலவுத் திட்ட பிரிவுகளுக்கு இடையே மேற்கொள்ளப்படும் மறு ஒதுக்கீடுகள் செலவின அமைப்பில் வேறுபாட்டை உருவாக்குவதில் எத்தகைய பங்கு வகுக்கிறது என்பதை குறிப்பதாகும்.

மானியங்கள், மிகை செலவினங்கள் மற்றும் சேமிப்புகள் ஆகியவற்றின் ஆண்டு வாரியான பகுப்பாய்வு, மாநிலத்தின் வரவு செலவுத் திட்ட நடைமுறை மற்றும் நிதி மேலாண்மையின் செயல்திறன் குறித்த மதிப்புமிக்க நுண்ணறிவுகளை விளக்குகிறது. இது **விளக்கப்படம் 2.3** இல் விவரிக்கப்பட்டுள்ளது.

விளக்கப்படம் 2.3: ஆண்டு வாரியான மானியங்கள், சேமிப்புகள் மற்றும் மிகை செலவினம்



(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளின் ஒதுக்கீடு கணக்குகள்)

மேலே உள்ள விளக்கப்படத்தில் இருந்து 2023-24 ஆம் ஆண்டில் ஒரு மானியத்தின் கீழ் ஏற்பட்ட அதிகப்படியான செலவினத்தை தவிர, 2020-21 முதல் 2024-25 வரையிலான ஆண்டுகளில் அவ்வாறான மிகை செலவினம் ஏதும் ஏற்படவில்லை என்பதைக் காணலாம். 2024-25 நிதியாண்டின் செலவின-அமைப்பு வெளிப்பாடு **அட்டவணை 2.4ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.4: நிதியாண்டு 2024- 25ன் செலவின அமைப்பின் ஒட்டுமொத்த விலகல்

பிரிவு	ஒட்டுமொத்த விலகல் (விழுக்காடு)	விலகல் வரம்பு (விழுக்காடு)	மானியங்களின் எண்ணிக்கை
வருவாய் (அனுமதிக்கப்பட்டது)	*(-) 10.25*	0 முதல் ± 25 வரை	51
		± 26 முதல் ± 50 வரை	3
		± 51 முதல் ± 100 வரை	1
மூலதனம் (அனுமதிக்கப்பட்டது)	*(-) 36.52*	0 முதல் ±25 வரை	23
		± 26 முதல் ± 50 வரை	5
		± 51 முதல் ± 100 வரை	14
வருவாய் (சாட்டப்பட்டது)	*(-) 59.08*	0 முதல் ± 25வரை	21
		± 26 முதல் ± 50 வரை	2
		± 51 முதல் ± 100 வரை	30
மூலதனம் (சாட்டப்பட்டது)	*(-) 58.89*	0 ± 25 வரை	3
		± 26 முதல் ± 50 வரை	1
		± 51 முதல் ± 100 வரை	5
13 மானியங்களில் (மானியம் எண்கள் 1, 2, 3, 10, 11, 18, 31, 33, 37, 46, 50, 51, 53) மூலதனப் பிரிவின் கீழ் ஒதுக்கீடு அளிக்கப்படவில்லை.			

(ஆதாரம்: ஒதுக்கீட்டுக் கணக்குகள் 2024-25)

அனுமதிக்கப்பட்ட இனங்களின் ஒட்டுமொத்த விலகல், வரவு செலவு திட்ட மதிப்பீடுகளில் 50 விழுக்காட்டை மீறிய சாட்டப்பட்ட இனங்களின் விலகல்களை

விட மிகக் குறைவாக இருந்தபோதிலும், அனுமதிக்கப்பட்ட வருவாய் இனங்களின் (சேமிப்பு) கீழ் உள்ள விலகல்கள் ஒரு மானியத்தில், அதாவது மானிய எண். 31 - தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் கீழ் ₹92.76 கோடி சேமிப்புடன் 50 விழுக்காட்டிற்கும் மேல் அதிகரித்தது பகுப்பாய்வில் தெரியவந்தது. இதேபோல், அனுமதிக்கப்பட்ட மூலதன இனங்களின் கீழ், 14 மானியங்களில் சேமிப்பு 50 விழுக்காட்டிற்கும் மேல் அதிகரித்தது தெரியவந்தது, மானிய எண். 17 - கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை) அதிகபட்சமாக 100 விழுக்காடு சேமிப்பைப் (₹113 கோடி) பதிவு செய்தது.

2.4 நிதியொதுக்கக் கணக்குகள்

நிதியொதுக்கக் கணக்குகள் என்பது இந்திய அரசியலமைப்பின் பிரிவு 204 இன் கீழ் நிறைவேற்றப்பட்ட நிதியொதுக்கச் சட்டத்தில் இணைக்கப்பட்ட அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, வெவ்வேறு நோக்கங்களுக்காக அனுமதிக்கப்பட்ட மானியங்கள் மற்றும் சாட்டப்பட்ட ஒதுக்கீடுகளின் அளவுகளுடன், ஒவ்வொரு நிதியாண்டுக்கும் அரசாங்கத்தின் செலவினங்களை ஒப்பிடும் கணக்குகளாகும். இந்த கணக்குகள் அசல் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு, துணை மானியங்கள், ஒப்படைப்புகள் மற்றும் மறு ஒதுக்கீடுகளுக்கு எதிராக உள்ளபடியான செலவினங்களை மொத்த அடிப்படையில் தெளிவாகக் காட்டுகின்றன.

பல்வேறு மானியங்களின் கீழ் உள்ளபடியாக வழங்கப்பட்ட அனுமதிக்கு ஒத்து செய்யப்பட்ட செலவினம், நிதியொதுக்கச் சட்டத்தின் கீழ் உள்ளதா என்பதையும், அரசியலமைப்பின் விதிகளின் கீழ் (பிரிவு 202) சாட்டப்படவேண்டிய செலவினம் அவ்வாறு சாட்டப்படுகிறதா என்பதையும் CAG ஆல் நடத்தப்படும் நிதியொதுக்கக் கணக்குகளின் தணிக்கை உறுதிசெய்கின்றது. மேலும், செய்யப்பட்ட செலவினம் சட்டங்கள், தொடர்புடைய விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு இணங்க உள்ளதா என்பதையும் உறுதிப்படுத்த முயல்கிறது.

2.5 வரவு செலவு திட்டம் மற்றும் கணக்கியல் செயல்முறை

வரவு செலவுத் திட்டம் மற்றும் கணக்கியல் செயல்முறை, பயன்படுத்தப்படும் நிதி அனுமதிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்வதற்காக, திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்துடன் உள்ளபடியான நிதி செயல்திறனை ஒப்பிடுகிறது. இந்த செயல்முறை, நிதி நடவடிக்கைகளின் திட்டமிடல், கட்டுப்பாடு மற்றும் செயல்திறன் மதிப்பீட்டிற்கு வழிவகுக்கிறது. இந்த செயல்முறையின் விளைவு பின்வரும் பத்திகளில் விவாதிக்கப்படுகிறது.

2.5.1 சட்டப்படியான அதிகாரம் இல்லாமல் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 266(3), இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 204 மற்றும் 205 இன் கீழ் தொடர்புடைய நிதியொதுக்கச்

சட்டங்கள் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படாவிட்டால், மாநிலத்தின் தொகு நிதியிலிருந்து பணம் எடுப்பதைத் தடை செய்கிறது. மேலும், வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சேர்க்கப்படாத ஒரு புதிய திட்டத்திற்கான செலவுகளை, அந்தத் திட்டம் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்படும் வரை அல்லது மாநிலத்தின் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாகப் பெறப்படும் வரை, மேற்கொள்ளக் கூடாது என்று தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை கையேட்டின் பத்தி 153 வழிவகை செய்கிறது.

இருப்பினும், 2024-25 ஆம் ஆண்டில், இரண்டு நேர்வுகளில், தலா இரண்டு மானியங்களின் கீழ், தலா ஒரு திட்டத்தில், உள்ளபடியான அசல் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள்/துணை தேவை கோரிக்கைகளில் எந்தவித நிதி ஒதுக்கீடும் இன்றி, ₹0.08 கோடி செலவு செய்யப்பட்டது **அட்டவணை 2.5-இல்** காணப்பட்டது (ஒவ்வொரு நேர்விலும் ₹ ஒரு இலட்சத்திற்கும் அதிகமாக செலவிடப்பட்டுள்ளது).

அட்டவணை 2.5 – வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு அல்லது மறு ஒதுக்கீடு இல்லாத செலவினம்

வ எண்	மானிய எண் மற்றும் பெயர்	கணக்குத் தலைப்பு மற்றும் பெயர்	நேர்வுகளின் எண்ணிக்கை	மேற்கொள்ளப்பட்ட செலவினம் *(₹ கோடியில்)*
1	42 - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	2505 01 702 JP - சம்பூர்ணா கிராமீன் ரோஸ்கர் யோஜனா - கிராம ஊராட்சி	1	0.07
2	51 - இயற்கை பேரிடர்களுக்கான நிவாரணம்.	2245 02 112 AC - வெள்ள நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகளின் போது திருப்பிச் செலுத்துதல் (பாதுகாப்பு அமைச்சகம், புது தில்லி) உதவி	1	0.01
மொத்தம்				**0.08**

(ஆதாரம்: 2024-25 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகள்)

முதல் திட்டமான, 'சம்பூர்ணா கிராமீன் ரோஸ்கர் யோஜனா - கிராம ஊராட்சியைப்' பொறுத்தவரை, சம்பளம், அகவிலைப்படி மற்றும் பயணச் செலவுகளுக்காகச் செலவினம் மேற்கொள்ளப்பட்டது. இரண்டாவது திட்டமான, 'வெள்ள நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகளின் போது திருப்பிச் செலுத்தப்படும் உதவி (பாதுகாப்பு அமைச்சகம், புது தில்லி)'ன் கீழ், தொழில்முறை மற்றும் சிறப்பு சேவைகளுக்கான கட்டணம் செலுத்துவதற்காக செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு இல்லாமல் செலவினங்களைச் செய்ய IFHRMS-இல் போதுமான கட்டுப்பாடுகள் இல்லாமல், அனுமதித்தது தொடர்பான தணிக்கை விசாரணைக்கு பதிலளிக்கும் விதமாக, நிறைவு கூட்டத்தின் போது மாநில அரசு, சம்பளக் கூறு தொடர்பான செலவினத்திற்கு, IFHRMS அமைப்பின் உள்ளமைக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் கீழ் விதிவிலக்குகள் அனுமதிக்கப்படுகின்றன என்று கூறியது.

மேலும், **அட்டவணை 2.6 இல்** காட்டப்பட்டுள்ள தலைப்புகளைப் பொறுத்தவரை, மார்ச் 2025ல் வெளியிடப்பட்ட மறு நிதியொதுக்க உத்தரவுகள் மூலம் மட்டுமே

செலவினம் மேற்கொள்ளப்பட்டது. வரிசை எண் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்திற்கு, நவம்பர் 2024ல் இருந்து செலவினம் மேற்கொள்ளப்பட்டு வந்தது என்பதும் கவனிக்கப்பட்டது. இருப்பினும், மார்ச் 2025ன் துணை மதிப்பீடுகளில் இதற்கான ஒதுக்கீடு தவிர்க்கப்பட்டது.

அட்டவணை 2.6 - மறு ஒதுக்கீடு மூலம் மட்டுமே மேற்கொள்ளப்படும் செலவினங்கள்

வரிசை எண்	மானிய எண் மற்றும் பெயர்	கணக்குத் தலைப்பு மற்றும் பெயர்	நேர்வுகளின் எண்ணிக்கை	மேற்கொள்ளப் பட்ட செலவினம் *(₹ கோடியில்)*
1	21 – நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	3054 80 001 AR தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிலம் கையகப்படுத்துதலுக்கான சிறப்புப் பணியாளர்கள்	1	0.12
2	43 – பள்ளிக் கல்வித் துறை	2202 02 109 KX சிறந்த பள்ளிகளுக்கு பேராசிரியர் அன்பழகன் விருது	1	0.07
மொத்தம்				**0.19**

(ஆதாரம்: 2024-25 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகள்)

பரிந்துரைக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றத் தவறியதால் சட்டமன்றத்தின் அங்கீகாரம் இல்லாமல் திட்டங்களுக்கான செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. மேலும், IFHRMS-ல் சரியான கட்டுப்பாட்டு வழிமுறை இல்லாததை இது தெளிவாக எடுத்துக்காட்டுகிறது, ஏனெனில் எந்தவொரு வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடும் இல்லாமல் செலவினம் செய்யப்பட்டது.

2.5.2 அதிகப்படியான செலவினம் மற்றும் அதை முறைப்படுத்துதல்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 205வது பிரிவின் படி, ஒரு மாநில அரசு, மானியங்கள்/ஒதுக்கீட்டின் மீதான அதிகப்படியான செலவினங்களை மாநில சட்டமன்றத்தால் முறைப்படுத்த வேண்டும். இந்த பிரிவின் கீழ் செலவினங்களை முறைப்படுத்துவதற்கான காலக்கெடு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்றாலும், பொதுக் கணக்குக் குழுவால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் பற்றிய விவாதம் முடிந்த பிறகு அதிகப்படியான செலவினங்கள் முறைப்படுத்தப்படுகிறது.

அ. நடப்பு ஆண்டின் மிகை செலவினம்

2024-25 ஆம் ஆண்டில், அனைத்துப் பணப் பரிமாற்றங்களும் மாநில சட்டமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட வரம்பிற்குள் இருந்தன என்பது பாராட்டத்தக்கது.

ஆ. கடந்த நிதியாண்டுகளின் மிகை செலவினங்களை முறைப்படுத்துதல்

மாநில சட்டமன்றத்தால் முறைப்படுத்தப்படாமல் நிலுவையில் உள்ள கடந்த ஆண்டுகளுக்கான மிகை செலவினங்கள் **அட்டவணை 2.7 இல்** காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 2.7: மாநில சட்டமன்றத்தால் முறைப்படுத்தப்படாமல் நிலுவையில் உள்ள கடந்த ஆண்டுகளுக்கான மிகை செலவினங்கள்

ஆண்டு	மானிய எண்/ ஒதுக்கீடு	மானியம்/ஒதுக்கீட்டு விவரங்கள்	நிதியொதுக்கக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி முறைப்படுத்தப்பட வேண்டிய மிகை செலவினங்கள் *(₹ கோடியில்)*
2022-23	51	இயற்கை பேரிடர்களுக்கான நிவாரணம் **(வருவாய் சாட்டப்பட்டது)**	*0.01 **
2023-24	10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)– (**கடன்கள் அனுமதிக்கப்பட்ட**)	0.03
	17	கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை) – **(வருவாய்–அனுமதிக்கப்பட்டது)**	0.75
	19	மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை **(வருவாய் சாட்டப்பட்டது)**	*0.01*
	43	பள்ளிக் கல்வித் துறை (**கடன்கள் அனுமதிக்கப்பட்ட**)	0.17
மொத்தம்			**0.97**

** ₹ 50,000*

(ஆதாரம்: அந்தந்த ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள்)

பொதுக் கணக்கு குழுவால் (PAC) நிதியொதுக்கக் கணக்குகள் பற்றிய விவாதம் முடிந்த பிறகு, மிகை செலவினங்கள் முறைப்படுத்தப்படுகிறது. 2022-23 ஆம் ஆண்டிற்கான ஒரு மானியத்தின் கீழ் ஏற்பட்ட மிகை செலவினம் பொதுக் கணக்கு குழுவால் விவாதிக்கப்பட்டது மற்றும் குழுவின் பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. 2023-24 ஆம் ஆண்டிற்கான மாநில நிதிநிலை மீதான தணிக்கை அறிக்கை 17 அக்டோபர் 2025 அன்று சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

2.5.2.1 சில மானியங்களில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட மிகை செலவினம்

அட்டவணை 2.8 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி இரண்டு மானியங்களின் கீழ் (மானியம் 19 மற்றும் 50) ஆறு நேர்வுகளில், கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒவ்வொரு நேர்விலும் தொடர்ச்சியாக ₹ ஒரு கோடிக்கும் அதிகமான மிகை செலவினம் இருந்ததை தணிக்கை ஆய்வு வெளிப்படுத்தியது. 2020-21 ஆம் ஆண்டில், ஒரு நேர்வில் (பிரிவு எண். 6), எவ்வித வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடும் செய்யப்படாமல் செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

அட்டவணை 2.8: 2020-21 முதல் 2024-25 வரையில் இருந்த தொடர்ச்சியான மிகைப்பட்ட செலவினம்

(₹ கோடியில்)

வரிசை எண்	மானியம்/ஒதுக்கீடு பற்றிய விளக்கம்	2020- 21	2021- 22	2022- 23	2023- 24	2024- 25
1.	**மானியம் எண்-19- மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை** 2210- மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் 01- நகர்ப்புர சுகாதார சேவைகள் - அலோபதி 110 - மருத்துவமனை மற்றும் மருந்தகங்கள்- EB - மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் - CEMONC பணியிடங்கள்					
	மானியம் (O+S) செலவினம் மிகை	35.03 37.37 2.34	26.95 28.50 1.55	30.84 32.64 1.80	31.69 34.29 2.60	35.61 37.14 1.53
2.	**மானியம் எண்-19- மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை** 2210- மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் 05 - மருத்துவக் கல்வி 105- அலோபதி AC – அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை					
	மானியம் (O+S) செலவினம் மிகை	44.19 64.74 20.55	65.38 67.49 2.11	73.88 76.75 2.87	86.70 88.42 1.72	88.75 103.87 15.12
3.	**மானியம் எண்-19-மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை** 2210- மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் 05 - மருத்துவக் கல்வி 105- அலோபதி CA - ஓமந்தூரார் அரசு தோட்டத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி					
	மானியம் (O+S) செலவினம் மிகை	42.81 48.28 5.47	49.54 52.31 2.77	45.73 57.52 11.79	63.89 65.58 1.69	70.24 75.14 4.90
4.	**மானியம் எண்-50 – ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வூதிய சலுகைகள்** 2071- ஓய்வூதியங்கள் மற்றும் பிற ஓய்வூதிய சலுகைகள் 01 - சிவில் 101- ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவுகள் AO- 80 வயதுக்கு மேற்பட்ட தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களுக்கு கூடுதல் ஓய்வூதியம்					

(₹ கோடியில்)

வரிசை எண்	மானியம்/ஒதுக்கீடு பற்றிய விளக்கம்	2020- 21	2021- 22	2022- 23	2023- 24	2024- 25
	மானியம் (O+S) செலவினம் மிகை	181.29 266.97 85.66	218.71 391.40 172.69	293.66 433.86 140.20	428.56 480.49 51.93	477.24 520.50 43.26
5.	**மானியம் எண்-50 – ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வூதிய சலுகைகள்** 2071- ஓய்வூதியங்கள் மற்றும் பிற ஓய்வூதிய சலுகைகள் 01 - சிவில் 105- குடும்ப ஓய்வூதியங்கள் AH- 80 வயதுக்கு மேற்பட்ட தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களுக்கு கூடுதல் குடும்ப ஓய்வூதியம்					
	மானியம் (O+S) செலவினம் மிகை	31.40 41.22 9.82	32.18 68.74 36.56	47.40 84.69 37.29	72.18 93.09 20.91	93.16 100.03 6.87
6.	**மானியம் எண்-50 – ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வூதிய சலுகைகள்** 2071- ஓய்வூதியங்கள் மற்றும் பிற ஓய்வூதிய சலுகைகள் 01 - சிவில் 800 - பிற செலவுகள் AO- ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய சுகாதார காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், பட்டியலிடப்பட்ட மருத்துவமனைகளில் கோவிட்-19 சிகிச்சைக்கான கார்பஸ் நிதி					
	மானியம் (O+S) செலவினம் மிகை	0.00 10.00 10.00	5.00 25.00 20.00	2.50 15.00 12.50	2.50 27.50 25.00	2.50 7.50 5.00

(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளின் விரிவான ஒதுக்கீட்டுக் கணக்குகள்)

இந்த ஆண்டில், துறைகளின் ஒட்டுமொத்த செலவினம் ஒதுக்கப்பட்ட மொத்த மானியங்களுக்குள் இருந்தபோதிலும், தலா மூன்று திட்டங்களை உள்ளடக்கிய இரண்டு மானியங்களின் கீழ் செய்யப்பட்ட செலவினம், திட்ட அளவில் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டை விட அதிகமாக இருந்தது. இது வரவு செலவுத் திட்ட உருவாக்கம் மற்றும் செலவினக் கட்டுப்பாட்டில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டுகிறது. மானியங்களுக்கான கோரிக்கைகள் மற்றும் மானியங்களுக்கான துணை கோரிக்கைகளைத் தயாரிப்பதன் இரு நிலைகளிலும் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் ஆய்வை துறைகள் வலுப்படுத்த வேண்டும். மேலும், திட்டங்களின் கீழ் மிகை செலவுகள் மீண்டும் ஏற்படுவதைத் தடுக்க, பயனுள்ள திட்டமிடலும், அனுமதிக்கப்பட்ட மானியங்களுக்கு எதிராக செலவினங்களை கண்காணித்தலும் அவசியமாகிறது.

2.5.3 தேவையற்ற துணை மானியங்கள்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 205, அசல் ஒதுக்கீட்டிற்கும் அதிகமான தேவைகளைப் பூர்த்தி செய்ய துணை அல்லது கூடுதல் மானியம் அல்லது நிதியொதுக்கத்தினை பரிந்துரைக்கிறது.

2024-25 ஆம் ஆண்டில், (**இணைப்பு 2.1**) துணை மானியமாக ₹3,803.56 கோடி வழங்கப்பட்டிருந்தாலும், உள்ளபடியான செலவு அசல் ஒதுக்கீட்டை விடக் குறைவாக இருந்தது கவனிக்கப்பட்டது. அதேபோல், 33 நேர்வுகளில் வழங்கப்பட்ட ₹12,673.55 கோடி துணை மானியங்கள் (ஒவ்வொரு நேர்விலும் ₹3 கோடிக்கு மேல்) மிகை என நிரூபணமானது (**இணைப்பு 2.2**).

2.5.4 ஆராயாது மேற்கொள்ளப்பட்ட மறுநிதியொதுக்கம்

ஒரு மானியத்திற்குள் ஒரு ஒதுக்கீட்டு அலகிலிருந்து கூடுதல் நிதி தேவைப்படும் மற்றொரு அலகிற்கு நிதிகளை மாற்றுவது மறுநிதியொதுக்கமாகும். 2024-25 ஆம் ஆண்டில், 55 மானியங்கள் மற்றும் இரண்டு ஒதுக்கீடுகள் கீழ் ₹43,778.16 கோடி மதிப்புள்ள மறு ஒதுக்கீடு ஆணைகள் வழங்கப்பட்டன. அனைத்து மறு ஒதுக்கீட்டு உத்தரவுகளும் இரண்டு நிலைகளில் அதாவது, மறு ஒதுக்கீடு-I (₹17,673.51 கோடி) 21 மார்ச் 2025 அன்றும் மற்றும் மறு ஒதுக்கீடு-II (₹26,104.65 கோடி) 31 மார்ச் 2025 அன்றும் வெளியிடப்பட்டன.

மானிய எண்.05 – வேளாண்மை – உழவர் நலத்துறை மற்றும் மானிய எண்.19 - மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை ஆகிய இரண்டு துறைகளால் வழங்கப்பட்ட மறுநிதியொதுக்க உத்தரவுகள் மூலம் நான்கு திட்டங்களில் (**இணைப்பு 2.3** - வரிசை எண்கள் 1 முதல் 4 வரை), ஒதுக்கீடுகள் (ஒவ்வொன்றும் ₹ மூன்று கோடிக்கு மேல்) திரும்பப் பெறப்பட்டன என்பது தணிக்கையில் தெரியவந்தது. இவை நியாயமற்றவை, ஏனெனில் இது அந்த சந்தர்ப்பங்களில் அதிகப்படியான செலவினங்களுக்கு வழிவகுத்தது. மேலும், மானிய எண்.05 - வேளாண்மை - உழவர் நலத்துறையின் கீழ் இரண்டு திட்டங்களில் (**இணைப்பு 2.3** - வரிசை எண். 5 மற்றும் 6), மறுநிதியொதுக்க உத்தரவுகள் மூலம் வழங்கப்பட்ட அதிகப்படியான ஒதுக்கீடு (₹ மூன்று கோடிக்கு மேல்) எந்த செலவும் செய்யப்படவில்லையாதலால் தேவையற்றது என நிரூபணமானது.

2.5.5 செலவிடப்படாத தொகை மற்றும் ஒப்படைக்கப்பட்ட நிதியொதுக்கம் மற்றும்/அல்லது பெருமளவிலான சேமிப்புகள்/ஒப்படைப்புகள்

செலவினங்களின் தரத்திற்காகவும், வரவு செலவுத் திட்டம் செய்யப்பட்ட நிதிகளின் குறைவான பயன்பாட்டைக் குறைப்பதற்கும், எதிர்பார்க்கக்கூடிய அனைத்து செலவினங்களின் பொருத்தமான செலவு நிலைகளை அடைய/உகந்ததாக்க வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் முயல வேண்டும். அனுமதிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்குள் உகந்த மறுஒதுக்கீட்டைப் பெறுவதற்கு செலவின அலகுகளால் சரியான நேரத்தில் மேற்கொள்ளப்படும் நிதி ஒப்படைப்பு ஒரு முக்கிய வழிமுறையாகும்.

2024-25 ஆம் ஆண்டின் மானியங்கள் மற்றும் ஒதுக்கீட்டின் மீதான பகுப்பாய்வு, 12 நேர்வுகளில் சேமிப்பு (ஒப்படைக்கப்பட்ட நிதி தவிர்த்து) ஒவ்வொன்றிலும் 11 மானியங்களுக்கு கீழ் ₹3 கோடியைத் தாண்டியது என்பதை வெளிப்படுத்தியது (**இணைப்பு 2.4**). மேலும், **அட்டவணை 2.9 இல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, நான்கு மானியங்களில் மொத்த மானியமான ₹113.80 கோடியில் எந்தச் செலவும் செய்யப்படவில்லை என்பது கவனிக்கப்பட்டது. இது மொத்த ஒதுக்கீட்டையும் பயனற்றதாக மாற்றியுள்ளது.

அட்டவணை 2.9: 2024-25 நிதியாண்டில் பயன்படுத்தப்படாமல் இருந்த மொத்த மானியம்

(₹ கோடியில்)

வ எண்.	மானியத்தின் எண் மற்றும் பெயர்	தொகை
1.	17 – கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை (மூலதனம் – அனுமதிக்கப்பட்டது)	113.00
2.	44 - குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை (மூலதனம் – அனுமதிக்கப்பட்டது)	0.70
3.	*51 - இயற்கை பேரிடர்களுக்கான நிவாரணம் (வருவாய் - சாட்டப்பட்டது)*	*0.04*
4.	*55 - இயற்கை வளங்கள் துறை (வருவாய் - சாட்டப்பட்டது)*	*0.06*
மொத்தம்		**113.8 0**

(ஆதாரம்: நிதியொதுக்கக் கணக்குகள்)

மானிய எண். 17 - கைத்தறி மற்றும் துணிநூல் (மேலே உள்ள வரிசை எண். 1) இன் கீழ் "4851-00-103-AC - யூனிட்டி மால்களின் கட்டுமானம்" என்ற கணக்குத் தலைப்பின் கீழ் வழங்கப்பட்ட மொத்த வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடான ₹113 கோடியும் திரும்ப ஒப்படைக்கப்பட்டதற்கான விளக்கம் கேட்கப்பட்டது. 2023-24 ஆம் ஆண்டு மத்திய வரவு செலவுத் திட்டத்தில் ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு (ODOP), புவியியல் குறியீடு (GI) தயாரிப்புகள் மற்றும் பிற கைவினைப்பொருட்களை மேம்படுத்துவதற்காக 27 மாநிலங்களில் PM ஏக்தா மால்கள் (யூனிட்டி மால்களை) நிறுவுவதற்கான அறிவிப்பின்படி, தமிழகத்திற்கு ₹223 கோடி வட்டியில்லா கடன் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. அதன்படி, சென்னை எழும்பூரில் உள்ள கோ–ஆப்டெக்ஸ் வளாகத்தில் ₹227 கோடி செலவில் (மத்திய அரசாங்க பங்கு: ₹223 கோடி; தமிழ்நாடு அரசு பங்கு: ₹4 கோடி) யூனிட்டி மால் கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. 2024 ஜனவரியில் முதல் தவணையாக ₹111.50 கோடியை மத்திய அரசு அனுமதித்தது. இரண்டாவது தவணை விடுவிப்பானது கட்டுமானம் மற்றும் நிதி முன்னேற்ற அறிக்கைக்கு உட்பட்டது என்று மத்திய அரசு நிபந்தனை விதித்தது.

மாநில அரசு, 2023-24 ஆம் ஆண்டில் நிர்வாக அனுமதியை வழங்கியது. மேலும் அனுமதிக்கப்பட்ட தொகை பெறப்பட்டு ஒற்றை ஒருங்கிணைப்பு முகமை (SNA) கணக்கில் செலுத்தப்பட்டது. இரண்டாவது தவணை விடுவிக்கப்படும் என்று எதிர்பார்த்து, 2024-25 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ₹113 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருப்பினும், தளத்தில் இருக்கும் கட்டடமைப்பை இடிப்பது அந்த ஆண்டில் முடிக்கப்படவில்லை. 29 ஜனவரி 2025 அன்று தான் அடிக்கல் நாட்டப்பட்டது மற்றும் கட்டுமானம் 14 பிப்ரவரி 2025 அன்று தொடங்கப்பட்டது.

மேலும் 2024-25 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க கட்டுமானம் மற்றும் நிதி முன்னேற்ற அறிக்கை எதுவும் அறிக்கையிடப்பட இயலவில்லை. இதன் விளைவாக, இரண்டாவது தவணை மத்திய அரசால் விடுவிக்கப்படவில்லை; மற்றும் 2024-25 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் வழங்கப்பட்ட முழு ஒதுக்கீடும் ஒப்படைக்கப்பட்டது.

மத்திய அரசின் திருத்தப்பட்ட வழிகாட்டுதல்களின்படி, முன்னர் விடுவிக்கப்பட்ட நிதியில் 75 சதவீத பயன்பாட்டின் அடிப்படையில் மீதமுள்ள நிதியை விடுவிப்பது அவசியமாகிறது என்று துறை மேலும் கூறியது. நவம்பர் 2025 இறுதி நிலவரப்படி, ₹97.61 கோடி பயன்பாடு பதிவாகியுள்ளது, மீதமுள்ள நிதி விடுவிக்கப்படும் என்ற எதிர்பார்ப்புடன், 2025-26 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2022-23 முதல் 2024-25 வரையிலான காலகட்டத்தில், 29 மானியங்களின் கீழ் 37 நேர்வுகளில், மொத்த மானியத்தில் ஐந்து விழுக்காட்டிற்கும் அதிகமாகவும், ஒவ்வொரு நேர்விலும் ₹3 கோடிக்கும் அதிகமாகவும் (**இணைப்பு 2.5**) தொடர் சேமிப்பு இருந்தது கண்டறியப்பட்டது. முந்தைய மாநில நிதி நிலை தணிக்கை அறிக்கைகளில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதிலும் இந்த நிகழ்வுகள் தொடர்ந்தன. தொடர்ச்சியான சேமிப்பு, குறைபாடுள்ள வரவு செலவுத் திட்ட செயல்முறையையும், மொத்த மானியம் அல்லது ஒதுக்கீட்டின் குறைவான பயன்பாட்டையும், வரவு செலவுத் திட்ட செயல்முறையின் தீவிர மதிப்பாய்வின் அவசியத்தையும் குறிக்கிறது.

2024-25 ஆம் ஆண்டில் மொத்த சேமிப்பு தொகையுடன் கூடிய சேமிப்பு விழுக்காடு அடிப்படையில் மானியங்களின் தொகுப்பின் மொத்த சேமிப்பு பற்றிய விவரங்கள் **இணைப்பு 2.6** மற்றும் **விளக்கப்படம் 2.4 இல்** காட்டப்பட்டுள்ளன.

விளக்கப்படம் 2.4: மானியங்கள் பயன்பாட்டு விழுக்காடு அடிப்படையிலான தொகுப்புடன் அதன் மொத்த சேமிப்பு பற்றிய விவரங்கள்



(ஆதாரம்: நிதியொதுக்கக் கணக்குகள்)

மொத்த சேமிப்பான ₹44,332.14 கோடியில், **இணைப்பு 2.7** இல் காட்டப்பட்டுள்ளபடி 53 மானியங்கள் மற்றும் ஒரு ஒதுக்கீட்டில் (ஒவ்வொன்றும் ₹3 கோடிக்கு மிகையானது) ₹26,098.42 கோடி மார்ச் 2025ன் கடைசி நாள் அன்று ஒப்படைக்கப்பட்டது.

விளக்கப்படம் 2.5: 2024-25 ஆம் ஆண்டில் சேமிப்புகள் மற்றும் ஒப்படைப்புகள்

(₹ கோடியில்)



(ஆதாரம்: நிதியொதுக்கக் கணக்குகள்)

விளக்கப்படம் 2.5 இன் பகுப்பாய்வு, 98.75 விழுக்காடு சேமிப்புகள் ஒப்படைக்கப்பட்டதாக வெளிப்படுத்தியுள்ளது. ஒப்படைக்கப்பட்ட மொத்த தொகையான ₹43,778 கோடியில், ₹26,104 கோடி (59.63 விழுக்காடு) 31 மார்ச் 2025 அன்று ஒப்படைக்கப்பட்டது. அதிகமான ஒப்படைப்புகள் கீழ் வரும் 5 துறைகளின் கீழ் செய்யப்பட்டது **(இணைப்பு 2.7)** அதாவது, பள்ளிக் கல்வித் துறை (₹6,997.99 கோடி), ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (₹5,228.45 கோடி), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (₹2,246.91 கோடி), மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை (₹1,990.71 கோடி) மற்றும் உயர்கல்வித் துறை (₹1,084.99 கோடி) ஆகியவை. மேலும் ஆய்வு செய்ததில் பின்வருவன தெரியவந்தன:

மானிய எண் 43 - பள்ளிக் கல்வித் துறையில், மானியத்தின் கீழ் மொத்த வரவு செலவுத் திட்டத்தில் சேமிப்பு 15.32 விழுக்காடாக இருந்தது. மொத்த சேமிப்பான ₹7,012.56 கோடியில், இந்த ஆண்டில் 12 திட்டங்களின் கீழ் தலா ₹100 கோடிக்கும் அதிகமாக ஒப்படைக்கப்பட்டன.

மானிய எண் 42 - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், மானியத்தின் கீழ் மொத்த வரவு செலவுத் திட்டத்தில் சேமிப்பு 20.56 விழுக்காடாக இருந்தது. மொத்த சேமிப்பான ₹6,083.81 கோடியில், இந்த ஆண்டில் 16 திட்டங்களின் கீழ் தலா ₹100 கோடிக்கு அதிகமாக ஒப்படைக்கப்பட்டன.

மானிய எண் 34 - நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில், மானியத்தின் கீழ் மொத்த வரவு செலவுத் திட்டத்தில் சேமிப்பு 9.92 விழுக்காடாக இருந்தது. மொத்த சேமிப்பான ₹2,718.46 கோடியில், இந்த ஆண்டில் ஆறு திட்டங்களின் கீழ் தலா ₹100 கோடிக்கும் அதிகமாக ஒப்படைக்கப்பட்டன.

மானிய எண் 19 - மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறையில், மானியத்தின் கீழ் மொத்த வரவு செலவுத் திட்டத்தில் சேமிப்பு 8.09 விழுக்காடாக இருந்தது. மொத்த சேமிப்பான ₹1,833.64 கோடியில், இந்த ஆண்டில் ஐந்து திட்டங்களின் கீழ் தலா ₹100 கோடிக்கும் அதிகமாக ஒப்படைக்கப்பட்டன. இதில் ஒரு திட்டத்தைப் பொறுத்தவரை, "தேசிய சுகாதார மிஷன்"க்காக மத்திய அரசிடமிருந்து

எதிர்பார்க்கப்பட்ட கூடுதல் நிதி திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் வழங்கப்பட்டதாக துறை கூறியது; இருப்பினும், இந்த நிதி விடுவிக்கபடாததால், திட்டத்தின் கீழ் ₹162.45 கோடி ஒப்படைக்கப்பட்டது.

மானிய எண் 20 – உயர்கல்வித் துறையில், மானியத்தின் கீழ் மொத்த வரவு செலவுத் திட்டத்தில் சேமிப்பு 24.52 விழுக்காடாக இருந்தது. மொத்த சேமிப்பான ₹2,052.10 கோடியில், இந்த ஆண்டில் ஐந்து திட்டங்களின் கீழ் தலா ₹100 கோடிக்கும் அதிகமாக ஒப்படைக்கப்பட்டன. அதற்கு பதிலளிக்கும் விதமாக, “பாலிடெக்னிக் கல்லூரிகளை மேம்படுத்துதல்” என்ற திட்டங்களின் கீழ், டெண்டர் செயல்முறையை மார்ச் 2025 வரை முடிக்க இயலவில்லை என்றும், இதன் விளைவாக ₹410.44 கோடி ஒப்படைக்கப்பட்டது என்றும் துறை கூறியது.

₹100 கோடிக்கும் அதிகமாக ஒப்படைக்கப்பட்ட விவரங்கள் **இணைப்பு 2.8 இல்** கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்த ஆண்டில், ஒன்பது மானியங்களில், வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு ₹100 கோடியைத் தாண்டிய 23 திட்டங்களின் கீழ், எந்த செலவும் செய்யப்படவில்லை, இதன் விளைவாக 100 விழுக்காடு சேமிப்பு ஏற்பட்டது. இதன் விவரங்கள் **இணைப்பு 2.9 இல்** கொடுக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வுகளில் வரவு செலவுத் திட்டம் ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தாதது திட்டமிடப்பட்ட நிதிச் செலவினத்தை அடையவில்லை என்பதைக் குறிக்கிறது.

மானியம் 52- மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் வரவு செலவுத் திட்ட மதிப்பாய்வில், **அட்டவணை 2.10-ல்** குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களைப் பொறுத்தவரை, முழு வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடும் பயன்படுத்தப்படாமல்; ஒப்படைக்கப்பட்டது தெரியவந்தது.

அட்டவணை 2.10: 2024-25 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்ட முழு ஒதுக்கீடுகள்

(₹ கோடியில்)

வ எண்	கணக்குத் தலைப்பு	விவரங்கள்	ஒதுக்கீடு (O+S)	மறு ஒதுக்கீடு	செலவினம்
1	2235.02.001.AK	சுற்றுலா தலங்களில் அணுகல் வசதிகளை தணிக்கை நடத்துதல்	0.49	(-) 0.49	0.00
2	2235.02.001.AL	அனைத்து அரசு அலுவலகங்களிலும் அணுகல் வசதிகளை தணிக்கை நடத்துதல்	1.97	(-) 1.97	0.00
3	2235.02.101.DO	ஒருங்கிணைந்த சேவைகள் திறன் தளம் / சூப்பர் செயலி மேம்பாடு – மாநில புத்தாக்க நிதியத்தின் கீழுள்ள திட்டங்கள்	0.56	(-) 0.56	0.00
4	2235.02.101.MZ	பெருமூளை வாதத்தால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கான ஊக்கம் மற்றும் மாற்று தொடர்பு அமைப்பு	1.36	(-) 1.36	0.00
5	2235.02.101.NR	அரசு சாரா அமைப்பு மூலம் சைகை மொழி மொழிபெயர்ப்பாளர் பயிற்சி அளித்தல்.	0.11	(-) 0.11	0.00
6	2235.02.101.NS	மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு ஒதுக்கும் வீட்டு வசதிகளுக்கான பயனாளிகள் பங்கினை செலுத்த வட்டியில்லா கடன் உதவி.	1.20	(-) 1.20	0.00
7	4235.02.101.SA	மாற்றுத்திறனாளிகள் சட்டத்தை செயல்படுத்துவதற்கான திட்டம் - (SIPDA)	5.00	(-)5.00	0.00
மொத்தம்			**10.69**	**(-) 10.69**	**0.00**

(ஆதாரம்: 2024-25 ஆம் ஆண்டிற்கான நிதியொதுக்கக் கணக்குகள்)

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை தனது பதிலில்,

(i) புதிய வலைத்தளத்தை (சூப்பர் PP வலை தளம்) (வ. எண் 3) உருவாக்குவதற்கு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும், அந்த வலைத்தளம் "தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு உரிமைகள் திட்டம்" என்ற மற்றொரு திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது, இதன் விளைவாக மறுநிதியொதுக்கம் மூலம் முழு ஒதுக்கீடும் ஒப்படைக்கப்பட்டது.

(ii) "பெருமூளை வாதத்தால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கான ஊக்கம் மற்றும் மாற்று தொடர்பு அமைப்பு" (வ. எண் 4)க்கான உபகரணங்களை வாங்குவதற்கான டெண்டர் செயல்முறையின் போது, தகுதியான நிறுவனம் எதுவும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. எனவே, வரவு செலவுத் திட்டம் ஒதுக்கீட்டைப் பயன்படுத்த முடியவில்லை.

(iii) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சாரல் தக்கர் கல்லூரியில் (தன்னாட்சி) சைகை மொழி மொழிபெயர்ப்பாளர் பயிற்சி வழங்கும் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியினை (வ எண்.5), தொடர்புடைய பயிற்சியை நடத்துவதற்கான இந்திய மறுவாழ்வு மன்றம் பதிவுச் சான்றிதழைப் பெறாததால் பயன்படுத்தப்பட முடியவில்லை.

(iv) மாற்றுத்திறனாளிகளுக்காக அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட வீடுகளுக்கு பயனாளிகள் தங்கள் பங்களிப்பை வழங்குவதற்காக வட்டியில்லா வீட்டுக் கடன் உதவி வழங்க தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிக்கு (வ. எண் 6) ₹1.20 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இருப்பினும், 2023-24 ஆம் ஆண்டிற்கான பயன்பாட்டுச் சான்றிதழ் (UC) சமர்ப்பிக்கப்படாததால், 2024-25 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தொகையான ₹1.20 கோடியும் ஒப்படைக்கப்பட்டது.

(v) பொதுப்பணித் துறையின் முன்மொழிவின்படி மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டமாகிய (வ. எண் 7), "தடையற்ற சூழல் அமைப்பதற்கான விழிப்புணர்வு திட்டம்" (Accessible India Campaign) சென்னை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள அரசு கட்டிடங்களில் தடையற்ற அணுகல் வசதியுடனான சூழலை உருவாக்குவதற்காக மத்திய அரசு முதல் தவணை மானிய உதவியை அனுமதித்தது. மேலும், இந்திய அரசுக்கு அனுப்பப்பட்ட இரண்டாவது தவணைக்கான ஒப்புதல் இன்னும் பெறப்படாததால், ₹5.00 கோடி ஒப்படைக்கப்பட்டது.

அணுகல் வசதிக்கான தணிக்கை நடத்தப்படாததற்கான காரணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை (வரிசை எண் 1 & 2). மற்ற நேர்வுகளில், முழு வரவு செலவுத் திட்டம் ஒதுக்கீட்டையும் ஒப்படைப்பதற்கான தகுந்த காரணங்கள் இருந்தாலும், நடப்பாண்டில் திட்டமிடப்பட்ட திட்டங்களை (வரிசை எண் 3 தவிர) தொடங்க முடியவில்லை.

2.5.6 வருவாய் செலவினத்திற்கும் மூலதன செலவினத்திற்கும் இடையிலான தவறான வகைப்பாடு

1990 ஆம் ஆண்டு அரசு கணக்கியல் விதிகளின் விதிமுறை 30 இன் படி, உறுதியான, பொருள் மற்றும் நிரந்தர சொத்துக்களை உருவாக்குவதற்கு மட்டுமே வழிவகுக்கும் செலவினங்களை மூலதனச் செலவினமாக வகைப்படுத்த வேண்டும்.

மேலும், 2024-25 நிதியாண்டில், மாநில அரசு, **இணைப்பு 2.10 இல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, ₹0.88 கோடியை மூலதனச் செலவாகவும் ₹1.00 கோடியை வருவாய்ச் செலவாகவும் தவறாகப் பதிவு செய்துள்ளது. மேற்பட்ட பகுப்பாய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது,

(i) பழங்குடியினர் ஆராய்ச்சி நிறுவனத்திற்கான ஆதரவு திட்டத்தின் கீழ் மூலதன சொத்துக்களை உருவாக்குவதற்கான மானிய உதவியில் மேற்கொள்ளப்பட்ட ₹0.50 கோடி செலவினம், வருவாய் செலவினத்திற்கு பதிலாக மூலதன செலவினத்தின் கீழ் தவறாக வகைப்படுத்தப்பட்டுள்ளது மற்றும்

(ii) இணை ஆணையர் (தொழிலாளர்) செலுத்திய இழப்பீட்டு தொகையான ₹0.38 கோடி வருவாய் செலவினத்திற்கு பதிலாக மூலதனக் கணக்கின் கீழ் தவறாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட தவறான வகைப்பாடுகள் வருவாய் செலவினத்தை அந்த அளவிற்குக் குறைத்து மதிப்பிடுவதற்கும் மூலதனச் செலவினத்தை மிகைப்படுத்துவதற்கும் வழிவகுத்தன.

(iii) மேலும், 'தூய்மை தமிழ்நாடு கம்பெனி லிமிடெட் ஆதார நிதி' திட்டத்திற்கான ₹1.00 கோடி செலவினம், மூலதன பங்கு சந்தாவிற்கானதால் மூலதனக் கணக்கிற்குப் பதிலாக வருவாய் கணக்கின் கீழ் தவறாக வகைப்படுத்தப்பட்டது. இதனால் வருவாய் செலவினம் அதிகமாகவும், மூலதனச் செலவினம் குறைவாகவும் மதிப்பிடப்பட்டது.

2.5.7 வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட கொள்கை முடிவுகள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான உள்ளபடியான நிதி ஒதுக்கீடு

ஒவ்வொரு ஆண்டும் வரவு செலவுத் திட்டம் உரையின் போது, முக்கிய கொள்கை அறிவிப்புகளின் ஒரு பகுதியாக மாநில அரசு புதிய கொள்கைகள்/திட்டங்களை அறிவிக்கிறது. இதைச் செயல்படுத்த, வரவு செலவுத் திட்டத்தில் போதுமான நிதியை ஒதுக்கி, சரியான நேரத்தில் செயல்படுத்த நிதியை அனுமதிப்பதில் மாநில அரசின் உறுதிப்பாடு இருக்க வேண்டும். திட்ட வழிகாட்டுதல்கள்/முறைகள் அனுமதிக்கப்படாதது, நிர்வாக அனுமதி இல்லாததால் பணிகள் தொடங்கப்படாதது மற்றும் வரவு செலவுத் திட்டம் வெளியிடப்படாதது போன்ற காரணங்களால் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட பல கொள்கை முயற்சிகள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ செயல்படுத்தப்படவில்லை.

2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட உரை, வரவு செலவுத் திட்ட

ஆவணங்கள் மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்குகளை ஆய்வு செய்ததில், அரசாங்கம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் 2024-25 ஆம் ஆண்டில் வீட்டிற்கு தலா ₹3.50 இலட்சம் செலவில் ஒரு இலட்சம் வீடுகளைக் கட்ட ₹3,500 கோடி ஒதுக்கீட்டில் “கலைஞரின் கனவு இல்லம்” என்ற பெயரில் ஒரு புதிய திட்டத்தை அறிவித்திருப்பது தெரியவந்தது. 2024-25 ஆம் ஆண்டில் இந்த திட்டத்தைச் செயல்படுத்த மேற்கண்ட தொகைக்கு அரசு நிர்வாக அனுமதியை (மார்ச் 2024) வழங்கியது. மேலும் செயல்படுத்துவதற்கான திட்ட வழிகாட்டுதல்களையும் வகுத்திருந்தது. திட்ட வழிகாட்டுதல்கள், வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு SC/ST பயனாளிகளுக்கு 40 விழுக்காடும், மீதமுள்ள 60 விழுக்காட்டை பொதுப் பிரிவினருக்கு வழங்கவும் வகை செய்கிறது. இருப்பினும், வரவு செலவுத் திட்டத்தில் ₹3,500 கோடிக்கு எதிராக ₹1,700 கோடி (48.57 விழுக்காடு) (SC/ST பிரிவினருக்கு ₹1,400 கோடிக்கு எதிராக ₹680 கோடி மற்றும் பொதுப் பிரிவினருக்கு ₹2,100 கோடிக்கு எதிராக ₹1,020 கோடி) மட்டுமே அரசு வழங்கியிருந்தது கவனிக்கப்பட்டது. இது வரவு செலவுத் திட்ட அறிவிப்புகள் முழுமையான உள்ளபடியான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடாக மாற்றப்படவில்லை என்பதை தெளிவாகக் காட்டுகிறது.

மேலும், சமூகத்தின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரான ஆதரவற்றோர், தனியாக வசிக்கும் முதியவர்கள், ஒற்றைப் பெற்றோர் குடும்பங்கள் மற்றும் அனாதை குழந்தைகளுக்கு சிறப்பு உதவிகளை வழங்குவதற்காக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் ₹27,922 கோடி வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் "முதலமைச்சர் தாயுமானவர் திட்டம்" என்ற புதிய திட்டத்தை அரசாங்கம் அறிவித்தது. இருப்பினும், இந்தத் திட்டம் நிர்வாக ரீதியாக அனுமதிக்கப்பட்டு, அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மட்டுமே தொடங்கப்பட்டதால், 2024-25 ஆம் ஆண்டில் மேற்கண்ட திட்டத்திற்கு அரசு எந்த நிதியும் வழங்கவில்லை என்பது கவனிக்கப்பட்டது. இது வரவு செலவுத் திட்டக் கொள்கை அறிவிப்புகளுக்கும் அவை வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடாக மாற்றப்படுவதற்கும் இடையிலான இடைவெளியைக் குறிக்கிறது.

2.5.8 காலாண்டு செலவு வரம்பைப் பின்பற்றாதது

தமிழ்நாடு அரசு மார்ச் 2024 இல் வெளியிட்ட செலவினக் கட்டுப்பாடு குறித்த அரசாணை மற்றும் தமிழ்நாடு நிதிச் சட்டத்தின் பிரிவு 39 இன் படி, அரசு நிதிகள் ஆண்டு முழுவதும் சமமாகச் செலவிடப்பட வேண்டும் மற்றும் குறிப்பாக நிதியாண்டின் இறுதி மாதங்களில் அவசர செலவினங்களைத் தவிர்க்க வேண்டும். நிதியாண்டின் இறுதியில் மேற்கொள்ளப்படும் அவசர செலவினங்கள் நிதி ஒழுக்கத்தை மீறுவதாகக் கருதப்படுகிறது. கடைசி காலாண்டில் மார்ச் மாதத்திலும், நிதியாண்டின் கடைசி நாளிலும் செய்யப்பட்ட செலவினங்களின் விவரங்கள் கீழே உள்ள **அட்டவணை 2.11 இல்** காட்டப்பட்டுள்ளன:

அட்டவணை 2.11: 2024-25 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அவசர செலவினங்கள்

	தொகை *(₹ கோடியில்)*	வருடத்தின் மொத்த செலவினத்தின் விழுக்காடு
ஆண்டின் கடைசி காலாண்டு (ஜனவரி-2025 முதல் மார்ச்-2025 வரை)	1,32,580.36	*30.30*
ஆண்டின் கடைசி மாதம் (மார்ச்-2025)	72,600.97	*16.59*
ஆண்டின் கடைசி நாள் (31 மார்ச் 2025)	2,049.84	*0.47*

(ஆதாரம்: O/o AG (A&E) இன் VLC தரவிலிருந்து தொகுக்கப்பட்டது)

2024-25 நிதியாண்டின் மொத்த மாதாந்திர வரவுகள் (வருவாய் வரவுகள், மூலதன வரவுகள் மற்றும் ரொக்க இருப்பு) மற்றும் செலவினங்களின் போக்கு விவரங்கள் கீழே உள்ள **விளக்கப்படம் 2.6** மற்றும் **விளக்கப்படம் 2.7இல்** காட்டப்பட்டுள்ளன

விளக்கப்படம் 2.6: வரவுகளின் போக்கு பகுப்பாய்வு (மாத வாரியாக)



(ஆதாரம்: O/o AG (A&E) இன் VLC தரவிலிருந்து தொகுக்கப்பட்டது)

பிப்ரவரி 2025 உடன் ஒப்பிடும்போது மார்ச் 2025 இல் வரவுகள் ₹37,581.26 கோடி அதிகரித்துள்ளதாக **விளக்கப்படம் 2.6** குறிப்பிடுகிறது. மேற்பட்ட பகுப்பாய்வு, இந்த திடீர் அதிகரிப்பு, முக்கியமாக, கணிசமான வட்டி வரவுகள், குறிப்பாக DCPS இன் கீழ் முதலீடுகள் மீதான வட்டி மற்றும் மின்சார நுகர்வு அல்லது விற்பனை மீதான வரி சட்டம், 2003 இன் கீழ் அதிக வசூல் காரணமாக ஏற்பட்டது என்பதைக் காட்டுகிறது.

கீழே உள்ள **விளக்கப்படம் 2.7 இல்** சித்தரிக்கப்பட்டுள்ள மாதாந்திர செலவினப் போக்கு, மார்ச் 2025ல் குறிப்பிடத்தக்க உயர்வைக் குறிக்கிறது, ஏனெனில் பிப்ரவரி 2025 உடன் ஒப்பிடும்போது செலவு ₹46,249.25 கோடி அதிகரித்துள்ளது. மார்ச் 2025 செலவினங்களை மேலும் ஆராய்ந்ததில், பல்வேறு ஓய்வூதியத் திட்டங்கள், வருங்கால வைப்பு நிதி, இழப்பீடு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான ஒதுக்கீடுகள், நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்திற்கான மூலதனச் செலவு மற்றும் சாலைகள் மற்றும் பாலங்களுக்கான மூலதனச் செலவுகள் ஆகியவற்றிற்காக செலுத்தப்பட்ட வட்டித் தொகையே இந்த அதிகரிப்பிற்கான முக்கிய காரணம் என்பதை வெளிப்படுத்தியது.

விளக்கப்படம் 2.7: செலவினங்களின் போக்கு பகுப்பாய்வு (மாத வாரியாக)



(ஆதாரம்: O/o AG (A&E) இன் VLC தரவிலிருந்து தொகுக்கப்பட்டது)

2025 மார்ச் மாத செலவினமான ₹72,600.97 கோடியில் (மொத்த செலவினத்தில் 16.59 விழுக்காடு), 122 துணைத் தலைப்புகளுக்கு ஏற்பட்ட முழுச் செலவும் (₹12,469.02 கோடி) 2025 மார்ச் இல் மட்டுமே செய்யப்பட்டது (**இணைப்பு 2.11**). மேலும், மார்ச் 2025 மாதத்தில் "5054 - சாலைகள் மற்றும் பாலங்களுக்கான மூலதனச் செலவு" என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அதிகபட்சத் தொகை செலவிடப்பட்டதாக தணிக்கை கண்டறிந்தது. முக்கியத் தலைப்பு 5054 இன் கீழ் செய்யப்பட்ட மாத வாரியான செலவுகள் **விளக்கப்படம் 2.8 இல்** கொடுக்கப்பட்டுள்ளன.

விளக்கப்படம் 2.8: 2024-25 ஆம் ஆண்டில் முக்கிய தலைப்பு 5054- சாலைகள் மற்றும் பாலங்களுக்கான மூலதன செலவினத்தின் கீழ் மாத வாரியான செலவு



(ஆதாரம்: O/o AG (A&E) இன் VLC தரவிலிருந்து தொகுக்கப்பட்டது)

மேலும், மாநில அரசு, செலவினங்களை படிப்படியாக ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன் வருடாந்திர செலவினங்களை காலாண்டு வாரியான விழுக்காடாக, அதாவது முதல் காலாண்டு - 25 விழுக்காடு; 2வது காலாண்டு - 25 விழுக்காடு; 3வது காலாண்டு - 25 விழுக்காடு; 4வது காலாண்டு - 25 விழுக்காடு என நிர்ணயித்துள்ளது, 2,185 துணைத் தலைப்புகளில், 4வது காலாண்டில் செலவு 30.30 விழுக்காடாக இருந்ததாக தணிக்கை கண்டறிந்தது. முந்தைய காலாண்டுகளில், இது 21.60 விழுக்காட்டிலிருந்து 24.55 விழுக்காடு வரை இருந்தது. அனைத்து மானியங்களிலும் செய்யப்பட்ட செலவினங்களின் காலாண்டு வாரியான விவரங்கள் **இணைப்பு 2.12 இல்** காட்டப்பட்டுள்ளன.

நிதி ஏற்றத்தாழ்வுகள் மற்றும் தற்காலிக பண நெருக்கடிகளைத் தடுப்பதால், செலவினங்களின் நிலையான வேகத்தைப் பராமரிப்பது நல்ல பொது நிதி நிர்வாகத்தின் ஒரு முக்கிய அங்கமாகும்.

2.6 மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய நிதியுதவி திட்டங்களை (CSS) செயல்படுத்துதல்

மத்திய நிதியுதவித் திட்டங்களின் (CSS) கீழ், சமூகத் துறைத் திட்டங்களுக்காக மாநிலங்களுக்கு மத்திய அரசால் மானியம் வழங்கப்படுகிறது. இது, கூட்டாட்சி தத்துவத்தின் முக்கிய அம்சமாக விளங்குகிறது. நிதி ஓட்ட செயல்திறனை மேம்படுத்த, ஒற்றை ஒருங்கிணைப்பு முகமை (SNA) முறையை அறிமுகப்படுத்துதல், SNA-SPARSH தளம் மற்றும் பொது நிதி மேலாண்மை அமைப்பு (PFMS) வழியாக சரியான நேரத்தில் நிதி விடுவிக்கப்படுதல் போன்ற சீர்திருத்தங்கள் இருந்தபோதிலும், வரவு செலவுத் திட்டம், கணக்கியல் மற்றும் மத்திய மற்றும் மாநில பங்குகளை ஒத்திசைவு செய்வதில் சவால்கள் நீடிக்கின்றன. செயல்திறன் அடிப்படையிலான மானியங்கள், டிஜிட்டல் கருவிகளை ஏற்றுக்கொள்வதை ஊக்குவித்தல் மற்றும் நிதி அமைப்புகளின் ஒருங்கிணைப்பு மூலம் இந்த சீர்திருத்தங்களை ஏற்றுக்கொள்ள மாநிலங்களை மத்திய அரசு ஊக்குவித்துள்ளது.

2.6.1 ஒற்றை ஒருங்கிணைப்பு முகமை - மத்திய மற்றும் மாநில பங்குகளை மத்திய நிதியுதவி திட்டங்களுக்கு மாற்றுதல்

மத்திய அரசின் நிதி அமைச்சகம், ஒவ்வொரு மத்திய நிதியுதவி திட்டத்திற்கும் (CSS) நிதியை அந்த குறிப்பிட்ட திட்டத்திற்காக நியமிக்கப்பட்ட ஒற்றை ஒருங்கிணைப்பு முகமை (SNA) மூலம் வெளியிட வேண்டும் என்று உத்தரவிட்டது (மார்ச் 2021). இந்த நிதிகளின் பயன்பாட்டைக் கண்காணிப்பதற்கு SNA பொறுப்பேற்கிறது. ஒவ்வொரு SNA-வும் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியில் ஒரு பிரத்யேக வங்கிக் கணக்கை பராமரிக்க வேண்டும். பெறப்பட்ட மத்திய பங்கை, அதற்கான மாநிலப் பங்குடன், அந்தந்த SNA-வின் கணக்கிற்கு மாநில அரசு மாற்ற வேண்டும்.

ஒரு CSS ஜல் ஜீவன் இயக்கம் தொடர்பான நிதி பரிமாற்ற விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன -

ஜல் ஜீவன் மிஷன்

ஜல் ஜீவன் மிஷன் (JJM) என்பது 2024 ஆம் ஆண்டுக்குள் ஒவ்வொரு கிராமப்புற வீட்டிற்கும் தனிப்பட்ட குழாய் இணைப்புகள் மூலம் பாதுகாப்பான மற்றும் போதுமான குடிநீரை வழங்குவதற்காக 2019 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஒரு முதன்மை மத்திய அரசு திட்டமாகும். JJM ஐ செயல்படுத்துவதற்கான இந்திய அரசின் செயல்பாட்டு வழிகாட்டுதல்களின்படி, இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கான மத்திய-மாநில நிதிப் பகிர்வு முறை, கிராமப்புற வீடுகளுக்கு வழங்கப்படும் செயல்பாட்டு வீட்டு குழாய் இணைப்புகளுக்கான (FHTCs) உள்கட்டமைப்புக்கு 50:50 ஆகவும், நீர் தர கண்காணிப்பு (WQM&S) உள்ளிட்ட ஆதரவு நடவடிக்கைகளுக்கு 60:40 ஆகவும் உள்ளது. 2022-23 வரை, மத்திய அரசின் பங்கு பொது நிதி மேலாண்மை அமைப்பு தளம் மூலம் மாநில அரசுக்கு வரவு வைக்கப்பட்டது. அதன் பிறகு, அனுமதிக்கப்பட்ட தொகையை வழங்கப்பட்ட 15 நாட்களுக்குள், மாநிலம் அதன் இணைப் பங்குடன் மிஷன் இயக்குநரால் பராமரிக்கப்படும் திட்டத்தின் ஒற்றை ஒருங்கிணைப்பு முகமைக்கு (SNA) விடுவிக்கவோ அல்லது மாற்றவோ வேண்டும். ஜனவரி 2023 முதல், மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதிப் பங்கு நேரடியாக SNA-க்கு விடுவிக்கப்பட்டது. அனைத்து கொடுப்பனவுகளும் SNA-ஐப் பயன்படுத்தி தளம் மூலம் செயல்படுத்தும் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டன.

2019-2025 காலகட்டத்திற்கு தமிழ்நாட்டில் JJM இன் கீழ் பெறப்பட்ட நிதி மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களின் விவரங்கள் **அட்டவணை 2.14 இல்** கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.12 மாநில அளவில் JJM நிதிகளின் வரவு மற்றும் செலவினம்

(₹ கோடியில்)

ஆண்டு	தொடக்க இருப்பு (OB)	வருடத்தில் வரவுகள்	மொத்தம்	வருடத்தில் செலவு	இறுதி இருப்பு (CB)
2019-20	11.76[2]	561.47	573.23	199.10	374.13
2020-21	374.13	1,366.95	1,741.08	965.10	775.98
2021-22	775.98	1,479.36	2,255.34	973.93	1,281.41
2022-23	1,281.41	1,753.90	3,035.31	1,290.40	1,744.91
2023-24	1,744.91	5,209.67	6,954.58	5,303.60	1,650.98
2024-25	1,650.98	3,313.03	4,964.01	4,740.42	223.59

(ஆதாரம்: TWAD வாரியம், சென்னை), அந்தந்த ஆண்டுகளின் ஒதுக்கீட்டுக் கணக்கு)

தாமதமாக விடுவிக்கப்பட்ட மத்திய உதவி

தணிக்கை ஆய்வில், மாநில அரசு பெற்ற மத்திய அரசின் பங்கு, நிர்ணயிக்கப்பட்ட பரிமாற்ற தேதிக்கு அப்பால் 6 முதல் 104 நாட்கள் வரை தாமதமாக SNAக்கு விடுவிக்கப்பட்டது தெரியவந்தது. மேலும், 2022-23 ஆம் ஆண்டு வரை SNAக்கு மாநிலத்தின் பங்கை வெளியிடுவதில் 14 முதல் 313 நாட்கள் வரை தாமதங்கள் காணப்பட்டன. இருப்பினும் கடந்த இரண்டு ஆண்டுகளில் எந்த தாமதமும் ஏற்படவில்லை. இருப்பினும், நிதி வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டாலும், நிதி

2 தொடக்க இருப்பு, முந்தைய தேசிய கிராமப்புறக் குடிநீர் திட்டத்திலிருந்து பெறப்பட்டது

பற்றாக்குறையால் JJM இன் கீழ் பணிகளின் முன்னேற்றம் பாதிக்கப்படவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது.

2.6.2 தேர்ந்தெடுக்கப்பட்ட மானியங்களின் விரிவான மதிப்பாய்வில் கவனிக்கப்பட்ட பிற சிக்கல்கள்

PFMS போர்ட்டலின் SNA அறிக்கை-01 இன் படி, மாநில அரசு இந்த ஆண்டில் SNA இன் CSS இன் மத்திய அரசின் பங்காக ₹9,080.03 கோடியைப் பெற்றது. இந்த ஆண்டில் மத்திய அரசு பங்கு ₹9,556.48 கோடி (PFMS அறிக்கையில் சேர்க்கப்படுவதற்கு முன்பு நிதி பரிமாற்றம் காரணமாக பிரதிபலிக்காத தொகையும் இதில் அடங்கும்) மற்றும் மாநில பங்கு ₹10,130.68 கோடி SNAகளுக்கு மாற்றப்பட்டதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இருப்பினும், தொடர்புடைய சான்று சீட்டு மற்றும் துணை ஆவணங்கள் PAG (A&E) அலுவலகத்தால் பெறப்படவில்லை. 31 மார்ச் 2025 நிலவரப்படி, SNA கணக்கில் செலவிடப்படாத தொகை ₹4,976.23 கோடியாக இருந்தது.

SNA கணக்கில் செலவிடப்படாத தொகையின் நிலை குறித்த விசாரணையில், 17 CSS இன் கீழ் உள்ள 46 மாநில அளவிலான சங்கங்கள் (SLS) பிப்ரவரி மற்றும் மார்ச் 2025 இல் SNA SPARSH கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளதாக அரசு பதிலளித்தது (டிசம்பர் 2025). மேலும், நவம்பர் 2025 நிலவரப்படி தொடர்ச்சியான பின்தொடர்தல் நடவடிக்கைகளின் அடிப்படையில், 39 SLS இன் கீழ் ₹246.42 கோடி மதிப்பிலான விகிதாசார மத்திய பங்கு மத்திய அரசுக்கு திரும்ப அனுப்பப்பட்டதாகக் கூறப்பட்டது. SPARSH கணக்கிற்கு செலவிடப்படாத நிலுவைகளை அனுப்புவது தொடர்பான மத்திய அரசின் வழிகாட்டுதல்களைப் பின்பற்ற அனைத்து துறைகளுக்கும் பொருத்தமான அறிவுறுத்தல்கள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அரசு மேலும் கூறியது.

தேர்ந்தெடுக்கப்பட்ட "மானியம் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை" மதிப்பாய்வின் போது, தணிக்கை துறையின் SNA கணக்குகள் மார்ச் 2025 நிலவரப்படி ₹799.58 கோடி செலவிடப்படாத இருப்பைக் காட்டியது. மத்திய நிதியுதவி திட்டத்தின் SNA கணக்கில், பிரதம மந்திரி அவாஸ் யோஜனா (PMAY) திட்டத்தில், 31 மார்ச் 2025 நிலவரப்படி ₹690.22 கோடி பெருமளவிலான இருப்பு இருந்தது. முந்தைய நிதியாண்டில் இருந்து ஒற்றை ஒருங்கிணைப்பு முகமை (SNA) கணக்கில் போதுமான அளவு செலவிடப்படாத நிதி ஏற்கனவே இருந்ததால், 2024–25 ஆம் ஆண்டில் மத்திய அரசால் மேலும் நிதி எதுவும் வெளியிடப்படவில்லை.

2.6.3 சிறு தலைப்பு - 911ன் கீழ் மீட்புகள் - முந்தைய ஆண்டுகளின் அதிகமாக செலுத்தப்பட்ட செலவிடப்படாத நிலுவைகளின் மீட்புகள்

தமிழ்நாடு வரவு செலவுத் திட்டம் கையேட்டின் பத்தி 178 இன் படி, உடனடி தேவை இல்லாமல் அரசு கணக்கிலிருந்து நிதி எடுப்பது முறையற்றது. மேலும், தமிழ்நாடு நிதிக் குறியீட்டின் (தொகுப்பு I) பிரிவு 39 இன் படி, நிதியாண்டின் இறுதியில் அனைத்து ஒதுக்கீடுகளும் முடிவடைகின்றன. மேலும் வரவு செலவுத் திட்ட நிதி காலாவதியாகாமல் இருக்க கருவூலத்திலிருந்து எந்த நிதியும்

எடுக்கப்படக்கூடாது. எனவே, செலவிடப்படாமல் இருக்கும் அனைத்து ஒதுக்கீடுகளும் அதே நிதியாண்டில் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

இந்த ஆண்டில், பல்வேறு மானியங்களில் 829 கணக்குத் தலைப்புகள்/திட்டங்கள் தொடர்பான முந்தைய ஆண்டுகளுடன் தொடர்புடைய ₹4,445.90 கோடி செலவிடப்படாத தொகை, “911 – பிடித்தம் - அதிகப்படியான கட்டணத்தை மீட்டெடுப்பது” என்ற சிறு தலைப்பின் கீழ் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டது.

மேலும் ஆய்வு செய்ததில், 2020-21 முதல் 2024-25 வரையிலான காலகட்டத்தில், “911” என்ற சிறு தலைப்பின் கீழ் பணம் செலுத்தப்படுவது அதிகரித்து வருவதாகவும், **விளக்கப்படம் 2.9 இல்** காட்டப்பட்டுள்ளபடி கடந்த ஐந்து ஆண்டுகளில் 7.87 மடங்கு அதிகரித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

விளக்கப்படம் 2.9: 2020-21 முதல் 2024-25 வரையிலான காலகட்டத்திற்கான 911 - அதிகப்படியான கட்டணங்களின் மீட்டெடுப்புகள்



(ஆதாரம்: அந்தந்த ஆண்டுகளின் நிதியொதுக்கக் கணக்குகள்)

மதிப்பாய்வுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மானியத்தின் அதாவது “மானியம் 42 - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை”, கீழ் இந்த முன்பதிவுகளை மேலும் பகுப்பாய்வு செய்ததில், இந்த ஆண்டில் 20 துணை கணக்குத் தலைப்புகளின் கீழ் மொத்தம் ₹1,466.47 கோடி செலுத்தப்பட்டது தெரியவந்தது. தணிக்கை விசாரணையில், இந்தத் தொகைகள் முக்கியமாக தொடங்கப்படாத பணிகளுடன் தொடர்புடையவை என்று துறை பதிலளித்தது.

இந்த செலவிடப்படாத இருப்புக்களின் தாக்கம் என்னவென்றால், வருவாய் இழப்பு ஆண்டில் செலவினம் அதிகரித்தது மட்டுமல்லாமல், வருவாய் பற்றாக்குறையும் அந்த அளவுக்கு அதிகரித்தது.

நிறைவு கூட்டத்தில், முந்தைய ஆண்டுகளின் செலவிடப்படாத நிலுவைகளுடன் தொடர்புடையதான, அரசு கணக்கிற்கு வெளியே வைக்கப்பட்டுள்ள நிதியை, சமரசம் செய்து, அடையாளம் கண்டு, மதிப்பிடவும், மீதமுள்ள நிதியை அரசு கணக்கில் செலுத்தவும் அரசாங்கம் ஒரு “சிறப்பு பணிக்குழுவை” அமைத்துள்ளதாகக் (செப்டம்பர் 2021) கூறப்பட்டது.

2.7 எதிர்பாரா செலவு நிதி

இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 267(2) மற்றும் 283(2) இன் விதிகளின்படி, தமிழ்நாடு எதிர்பாரா செலவு நிதிச் சட்டம், 1954 இன் கீழ், மாநிலத்தின் எதிர்பாரா செலவு நிதி (CF) நிறுவப்பட்டது. மேலும், தமிழ்நாடு எதிர்பாரா செலவு நிதிச் சட்டம், 1954 (1954 ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டம் II) இன் பிரிவு 3 ஆல் வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் தமிழ்நாடு எதிர்பாரா நிதி விதிகள், 1963 ஐ அரசு நிறுவியது. அவ்விதிகள் எதிர்பாராத செலவினங்களை மேற்கொள்வதற்கு, மாநிலத்தின் எதிர்பாரா செலவு நிதியில் பணம் செலுத்துதல் மற்றும் பணத்தை பெறுதல் தொடர்பானவற்றையும் ஒழுங்குபடுத்துவதற்கான வழிமுறைகளை வழங்குகின்றன. இந்த நிதி ஒரு முன்பணத்தின் தன்மையில் உள்ளது. மாநில சட்டமன்றம் கூடுதல் செலவினங்களுக்கு ஒப்புதல் அளிக்கும்போது நிதி திரும்பப் பெறப்படுகிறது. இந்த நிதியின் மூலதனம் இந்த ஆண்டில் ₹150 கோடியிலிருந்து ₹500 கோடியாக உயர்த்தப்பட்டது.

2.7.1 எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணங்கள்

எதிர்பாராத மற்றும் அவசரத் தன்மை கொண்ட செலவினங்களைச் சமாளிக்க மட்டுமே எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணங்கள் வழங்கப்பட வேண்டும், மாநில சட்டமன்ற ஒப்புதல் பெறப்படும் வரை இதனை ஒத்திவைப்பது விரும்பத்தக்கதல்ல.

2024-25 நிதியாண்டில், ஆறு திட்டங்கள்/நிகழ்வுகளுக்காக ஆறு துறைகளால்[3] எதிர்பாரா செலவு நிதியிலிருந்து ₹56.27 கோடி முன்பணமாக பெறப்பட்டது.

எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் பெற்ற திட்டங்களின் விவரங்கள் **அட்டவணை 2.13 இல்** கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.13: எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் பெற்ற திட்டங்களின் விவரங்கள்

(₹ கோடியில்)

வ. எண்	திட்டத்தின் கோரிக்கை எண், கணக்குத் தலைப்பு மற்றும் விவரம்	CFA எண் மற்றும் ஒப்புதல் தேதி	அசல் வரவு செலவுத் திட்டம்	துணை வரவு செலவுத் திட்டம்	மொத்தம்	செலவினம்	சேமிப்பு/ மிகை	எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம்
1.	மானிய எண்.22 2055-00-109-AL மாவட்டங்களின் காவல் ஆணையர்கள்	CF எண்.4, தேதி 07.11.2024	1,761.93	0.37	1,762.30	1,726.35	(-) 35.95	0.37
2.	மானிய எண்.33 2052-00-091-AA மாநில அலுவல் மொழி (சட்டமியற்றுதல்) ஆணையம்	CF எண்.3, தேதி 28.10.2024	3.69	0.89	4.58	4.45	(-) 0.13	0.73
3.	மானிய எண்.38 2070-00-105-DC கள்ளக்குறிச்சி மாவட்டம் கருணாபுரத்தில் மெத்தனால் கலந்து	CF எண்.1, தேதி 29.08.2024 CF எண்.2, தேதி 24.10.2024 CF எண்.6, தேதி 27.11.2024	0.00	0.65	0.65	0.89	0.25	0.65

[3] காவல்துறை, சட்டம், பொதுமக்கள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலன்)

(₹ கோடியில்)

வ. எண்	திட்டத்தின் கோரிக்கை எண், கணக்குத் தலைப்பு மற்றும் விவரம்	CFA எண் மற்றும் ஒப்புதல் தேதி	அசல் வரவு செலவுத் திட்டம்	துணை வரவு செலவுத் திட்டம்	மொத்தம்	செலவினம்	சேமிப்பு/ மிகை	எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம்
	சாராயம் குடித்த சம்பவம் குறித்து விசாரிக்க விசாரணை ஆணையம் .							
4.	மானிய எண்.41 2053-00-094-AB அறிமுகம் வட்டாட்சியர் நிறுவனங்கள்	CF எண்.5, தேதி 14.11.2024	491.14	0.30	491.44	479.54	(-) 11.90	0.30
5.	மானிய எண்.42 2216-03-796-JG பிரதான் மந்திரி ஜன்மான் திட்டத்தின் கீழ் வீடுகளுக்கான கூடுதல் அலகு செலவு	CF எண்.7, தேதி 26.02.2025	0.00	108.71	108.71	108.71	0.00	54.00
6.	மானிய எண்.52 2235-02-101-NT ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் குறைபாட்டிற்கான சிறப்பு மையம்	CF எண்.8, தேதி 28.03.2025	0.00	0.00	0.00	0.00	0.00	0.22
மொத்தம்			2,256.76	110.92	2,367.68	2,319.94	(-) 47.74	56.27

(ஆதாரம்: மாநில அரசின் CFA ஆணைகள் மற்றும் விவரங்கள் O/o AG (A&E) ஆல் வழங்கப்பட்டுள்ளன விவரங்கள்)

தமிழ்நாடு எதிர்பாரா செலவு நிதி விதிகளின் பத்தி 6 இன் படி, எதிர்பாரா செலவு நிதியிலிருந்து பெறப்பட்ட தொகை பயன்படுத்தப்படாமல் இருந்தால், அனுமதியை ரத்து செய்வதற்கான விண்ணப்பத்தை ஒப்புதல் அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும். இருப்பினும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறைக்கு வழங்கப்பட்ட 28 மார்ச் 2025 தேதியிட்ட CFA எண் 8, நிதியாண்டின் இறுதியில் பயன்படுத்தப்படாமல் இருந்ததாகவும், அதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டில் பயன்படுத்தப்பட்டதாகவும் தணிக்கை கண்டறிந்தது.

2024-25 வரவு செலவுத் திட்டத்தின் கூட்டத்தொடரின் அமர்வின் போது (பிப்ரவரி 2024) சென்னை மாவட்டத்தில் ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் குறைபாடு (ASD) உள்ளவர்களுக்காக ₹25 கோடி மதிப்பீட்டில் ஒரு உயர் சிறப்பு மையத்தை (CoE) நிறுவுவதற்கான முன்மொழிவு முன்வைக்கப்பட்டது. நிர்வாக அனுமதியை எதிர்பார்த்து நிபுணர்கள்/சிகிச்சையாளர்களை ஈடுபடுத்தியும் பொருட்கள் கொள்முதலின் மூலமும் இந்த மையம் டிசம்பர் 2024 முதல் செயல்படத் தொடங்கியது. இருப்பினும், எதிர்பாரா செலவு நிதிக்கான அனுமதி 28 மார்ச் 2025 அன்று மட்டுமே வழங்கப்பட்டு, அந்த ஆண்டு முழுவதும் பயன்படுத்தப்படாமல் இருந்தது எனத் தணிக்கை ஆய்வில் தெரியவந்துள்ளது.

2.8 பிற சிக்கல்கள்

2.8.1 “99 – இதர” என்ற விரிவான தலைப்பின் செயல்பாடு மற்றும் அனுமதிக்கப்படாத மறுஒதுக்கீடுகள் அங்கீகரிக்கப்படாத மறு கையகப்படுத்தல்

செயலக வழிமுறைகள் மற்றும் தமிழ்நாடு அரசு வணிக விதிகள் 39 மற்றும் 10 இன் கீழ், நிதித் துறையால் அதிகார ஒப்படைப்பு அளிக்கப்பட்டுள்ள நேர்வுகளைத் தவிர, மாநிலத்தின் நிதி தொடர்பான அனைத்து நேர்வுகளும் நிதித் துறைக்கு பரிந்துரைக்கப்பட வேண்டும். அதன்படி, நிதித் துறை (G.O. Ms. No. 519, நிதி (சம்பளங்கள்) துறை தேதி 29.09.1997 ஐப் பார்க்கவும்), அதனிடம் குறிப்பிடாமல் நேர்வுகளை விரைவாக முடிக்க அரசு செயலாளர்கள் மற்றும் செயலகத் துறைகளுக்கு ₹25 இலட்சம் வரையிலான சில நிதி அதிகாரங்களை வழங்கியது.

இதனைத் தொடர்ந்து, 2022-23 ஆம் ஆண்டில் நிதித்துறை (G.O. No. 334 தேதி 22.10.2022ல்) நேர்வுகளை தன்னிடம் குறிப்பிடாமலேயே செயல்படுத்த செயலாளர்களுக்குரிய அதிகாரத்தை ₹25 இலட்சத்திலிருந்து ₹75 இலட்சமாக உயர்த்தியது. இதனால், இந்த அரசாணையின் அடிப்படையில் ஏற்படும் செலவினங்களுக்கு நிதித்துறையின் ஒப்புதல் தேவையில்லை. அரசுத் துறைகளின் செயலாளர்களுக்கு, பின்வரும் வழிகாட்டுதல்களுடன் கிடைக்கக்கூடிய வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டைக் கொண்டு, மேற்கூறிய அரசு உத்தரவில் (GO) பட்டியலிடப்பட்டுள்ள சில செலவினங்களை அனுமதிக்கும் அதிகாரங்களும் வழங்கப்பட்டன.

(i) அனைத்து நிர்வாகத் துறை அரசு செயலாளர்களுக்கும், எதிர்பாராத செலவினங்களுக்கான மானியம், ஆண்டுக்கு ₹75 இலட்சம் என ஆண்டுதோறும் வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்படும்.

(ii) இந்த மானியம் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகை மற்றும் செலவினப் பொருட்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

(iii) இந்த மானியம் மாநிலத்தின் ஒருங்கிணைந்த நிதியில் சாட்டப்படும் செலவினப் பொருட்களுக்குப் பொருந்தாது.

(iv) இந்த மானியத்தை மறு ஒதுக்கீடு செய்ய இயலாது.

2024-25 ஆம் ஆண்டில், மானியங்களுக்கான[4] 37 கோரிக்கைகளின் கீழ், “99 – இதர” என்ற விரிவான தலைப்பின் கீழ், “அரசாங்கத்தின் செயலாளர்களுக்கு வழங்கப்படும் எதிர்பாராத செலவினங்களுக்கான மானியங்கள்” என்ற திட்டத்திற்காக, மொத்தம் ₹27.75 கோடி (ஒவ்வொரு மானியத்தின் கீழும் ₹75 இலட்சம்) ஒதுக்கீடு செய்யப்பட்டது, இதற்கு எதிராக ₹14.47 கோடி செலவிடப்பட்டது. (மானிய வாரியான விவரங்கள் **இணைப்பு 2.13 இல்** கொடுக்கப்பட்டுள்ளன).

[4] மானிய எண்கள். 4, 5, 6, 9, 10, 12, 14, 15, 16, 17, 19, 20, 21, 22, 26, 27, 29, 31, 32, 33, 34, 35, 36, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, 46, 48, 49, 52, 53 மற்றும் 55.

சான்றிதழ் செயல்முறையின் போது, நிதித்துறை (மானிய எண்.16) தவிர, வரவு செலவுத் திட்டம் ஒதுக்கப்பட்ட அனைத்து துறைகளின் செயலாளர்களும் அதற்கு எதிராக செலவு செய்திருப்பது கவனிக்கப்பட்டது. செய்யப்பட்ட செலவினம் பெரும்பாலும் தளவாடங்கள் வாங்குதல், பழுதுபார்ப்பு தொடர்பான பணிகள், மற்றும் அலுவலக கட்டிடங்களில் சிறிய மேம்பாடு, வழக்கறிஞர் கட்டணம் செலுத்துதல் மற்றும் தொழில்முறை மற்றும் சிறப்பு சேவைகள் போன்றவை ஆகும். இதுபோன்ற அனைத்து செலவுகளும் எதிர்பாராதவை அல்ல, மேலும் கணக்குப் புத்தகங்களில் அத்தகைய ஒவ்வொரு செலவையும் பதிவு செய்ய குறிப்பிட்ட தொடர்புடைய விரிவான தலைப்புகள் இருந்தன என்பதைக் குறிப்பிடுவது பொருத்தமானது.

மேலும், மார்ச் 2025 இறுதியில், கால்நடை பராமரிப்புத் துறையால் (மானிய எண்.6) “3451-00-090-AQ-அரசாங்க செயலாளர்களுக்கு வழங்கப்படும் எதிர்பாராத செலவினங்களுக்கான மானியங்கள்” என்ற தலைப்பிலிருந்து ₹5 இலட்சத்தை பால்வள மேம்பாட்டுத் துறையின் கீழ் (மானிய எண். 8) உள்ள “2404-00-001-JA-தலைமையகம் - பால் உற்பத்தி மற்றும் பால்வள மேம்பாட்டுத் துறையை நிறுவுதல் - 305- அலுவலக செலவுகள் – 05 தளவாடங்கள்” என்ற கணக்கிற்கு மாற்றுவதற்கான முன்மொழிவு வைக்கப்பட்டது. இதன் அடிப்படையில், தளவாடங்கள் வாங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட ₹4,99,492/- செலவினம், கால்நடை பராமரிப்பு ஆணையரால் மானிய எண். 8 - பால்வள மேம்பாட்டுத் துறையின் கீழ், எடுக்கப்பட்டது தணிக்கை ஆய்வில் தெரியவந்தது. இரண்டு மானியங்களுக்கும் ஒருவரே செயலாளர் என்பதால் ஒரே துறையின் கீழ் வருவது அறியப்பட்டது. எதிர்பாராத செலவினங்களைச் சமாளிக்க வழங்கப்பட்ட மானியத்தை வேறு பிரிவுக்கு ஒதுக்க முடியாது என்ற அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை இது மீறுவது தெளிவானது.

இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியங்களுக்கு நிதித் துறையின் ஒப்புதல் தேவையில்லை என்பதால், ஒரு மானியத்திலிருந்து மற்றொரு மானியத்திற்கு மறு பயன்பாட்டிற்கான ஒதுக்கீடு போன்ற விதிமீறல்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. தமிழ்நாடு வரவு செலவு திட்ட கையேட்டின் படி இத்தகைய செயல்முறைக்கு அனுமதியில்லை. மேலும், “99-இதர வகை” என்ற விரிவான தலைப்பின் கீழ் செலவினங்களைச் செய்வது நிதி அறிக்கையிடலில் வெளிப்படைத்தன்மையைப் பாதிக்கிறது.

2.9 முடிவுரை

2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மேலாண்மை மீதான தணிக்கை, மொத்த செலவினம் சட்டமன்றத்தின் அங்கீகாரத்திற்குள் இருந்தபோதிலும், வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள், திருத்தப்பட்ட மதிப்பீடுகள் மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கு இடையில் இடைவெளிகள் நீடித்தன என்பதைக் குறிக்கிறது.

தொடர்ச்சியான சேமிப்புகள், பெரிய அளவிலான ஆண்டு இறுதி நிதி ஒப்படைப்பு மற்றும் தேவையற்ற துணை மானியங்கள் வழங்கல் போன்ற நிகழ்வுகள் வரவு செலவுத் திட்டமிடல் மற்றும் செயல்முறை திறனுக்கு இடையிலான ஒத்திசைவு குறைபாடுகளைக் குறிக்கின்றன. நான்கு மானியங்களின் கீழுள்ள மொத்த

ஒதுக்கீடான ₹113.80 கோடி பயன்படுத்தப்படாமல் இருந்தது. அதே நேரத்தில், கணிசமான ஒதுக்கீடுகளைக் கொண்ட பல திட்டங்கள் எவ்வித செலவையும் பதிவு செய்யவில்லை. மொத்த நிதி ஒதுக்கீடுகளில் பாதிக்கும் மேற்பட்டவை (₹26,104 கோடி) நிதியாண்டின் கடைசி நாளில் மேற்கொள்ளப்பட்டதால், இது பயனுள்ள மறு ஒதுக்கீட்டிற்கான நோக்கத்தை மட்டுப்படுத்தியது.

வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு இல்லாமல் செய்யப்பட்ட செலவினங்களின் அளவு சிறியதாக இருந்தாலும் (₹0.08 கோடி), இதுபோன்ற நிகழ்வுகள் செலவினக் கட்டுப்பாடுகள் மற்றும் அமைப்பு அளவிலான கட்டுப்பாடுகளில் உள்ள இடைவெளிகளைக் குறிக்கின்றன. பல ஆண்டுகளாக, தேர்ந்தெடுக்கப்பட்ட மானியங்களின் கீழ் திட்ட அளவில் மீண்டும் மீண்டும் ஏற்படும் அதிகப்படியான செலவு, வரவு செலவுத் திட்ட உருவாக்கம் மற்றும் செயல்படுத்தலின் போது வலுவான ஆய்வுக்கான அவசியத்தை மேலும் எடுத்துக்காட்டுகிறது.

ஆண்டு இறுதியில் மேற்கொள்ளப்பட்ட அதிகப்படியான செலவினங்களை தணிக்கை குறிப்பிட்டது. இறுதி காலாண்டில் 30.30 விழுக்காடும், மார்ச் 2025 இல் 16.59 விழுக்காடும் நிர்ணயிக்கப்பட்ட செலவின விதிமுறைகளுக்கு மாறாக ஏற்பட்டது. ஒற்றை ஒருங்கிணைப்பு முகமை கணக்குகளில் குறிப்பிடத்தக்க செலவிடப்படாத இருப்புக்களும் வரவு செலவுத் திட்ட கொள்கை அறிவிப்புகள் ஓரளவு மட்டுமே உள்ளபடியான ஒதுக்கீடுகளாக ஆனதும் நிதி ஒழுங்கை பாதித்தது.

ஒட்டுமொத்தமாக, இந்த அத்தியாயம், வரவு செலவுத் திட்டத்தின் திட்டமிடலை மேம்படுத்துதல், செலவினக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துதல் மற்றும் கொள்கை அறிவிப்புகள், வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு மற்றும் உள்ளபடியான செயல்படுத்தல் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பை மேம்படுத்துதல் ஆகியவற்றின் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது.

2.10 நல்ல நடைமுறைகள்

(i) ஆண்டு முழுவதும், அனைத்துப் பண செலுத்தங்களும் மாநிலத்தால் வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கு உட்பட்டே இருந்தன, மேலும் துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த மானியத்தை விட அதிகமாக எந்தச் செலவும் செய்யப்படவில்லை.

(ii) 17.10.2025 அன்று சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2023-24 ஆம் ஆண்டைத் தவிர, முந்தைய ஆண்டுகளின் மானியங்களுடன் தொடர்புடைய அதிகப்படியான செலவுகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

2.11 பரிந்துரைகள்

(i) எதிர்பார்க்கப்படும் சேமிப்புகளை அடையாளம் காண்பதற்கும், கடைசி நேரத்தில் நிதி ஒப்படைப்பு மற்றும் இறுதி கால அவசர செலவினங்கள் ஆகியவற்றை தவிர்ப்பதற்கும், வரவு செலவுத் திட்ட செயல்முறையின் ஒழுங்கான செயல்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றை அரசு உறுதிபடுத்தலாம். IFHRMS இன் வணிக நுண்ணறிவு தொகுதி மூலம்

செலவினங்களின் முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணிப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

(ii) *வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு இல்லாமல் செலவினங்கள் ஏற்படுவதைத் தடுக்க, IFHRMS-க்குள் உள்ள அமைப்பு சரிபார்ப்புகள் உட்பட செலவினக் கட்டுப்பாடுகள் வலுப்படுத்தப்படலாம்.*

(iii) *வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட முக்கிய கொள்கைகள்/திட்டங்களுக்கு போதுமான ஒதுக்கீடுகள் செய்யப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.*